# வளர் தமிழ்

# 7




தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# வளர்தமிழ்

# 7

தமிழே எங்கள் உயிர்

# முன்னுரை

புலம் பெயர்ந்து வாழும் எம் தமிழ்ப் பெருங்குடியின் நிகரிலா அன்புச் செல்வங்களே!

நீங்கள் மாணவராய், பெற்றோராய், ஆசிரியர்களாய் இன்னும் பல்வேறு வழிகளிலே தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையினுடன் தொடர்பு உடையவர்களாக உள்ளீர்கள்.

உங்களுடன் தாய்மொழிக் கல்வித் தொடர்பில் பேசுவதில் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை பெருமை கொள்கிறது. புலம்பெயர்ந்து வாழும் நீங்கள் கடல் கடந்தாலும் உங்களது பண்பாட்டுக் கோலங்களையும் இனப்பற்றையும் மொழிப்பற்றையும் கடந்து விடாது போற்றுகின்ற உங்களது பற்றைக்கண்டு, உங்களது இனமொழி நாட்டங்களைச் செழுமையுறச் செய்வதற்காக எம்மால் முடிந்தவரை உருவாக்கப்பட்டதே இந்நூற்றொடராகும்.

இந்நூல்களிலே எமது எதிர்கால ஆக்கர்களாகிய இளஞ்சிறார்கள் எத்தகைய அறிவைத் தமது மொழிக்கற்கையூடாகப் பெறவேண்டும், எவ்வாறு அவர்களை நற்றமிழர்களாக இனவெல்லைக்குள் கொண்டு வரக்கூடிய அறிவைப் பெருக்க வேண்டும் என்று எண்ணித் துணிந்த பாடங்களையே அலகுகளாகக் கொண்டு, இந்நூல் வெளிவருகிறது.

ஒருவர் தனது தாய்மொழியை அதற்குரிய விழுமியங்களூடாகவே கற்க வேண்டும் அப்போதுதான் கற்பவரின் மனதில் தாய்மொழி உணர்வு வலுப்பெறும். தன்மொழியில் விரவியுள்ள பிறமொழிச் சொற்களுடன் கற்பது, தாய்மொழி வழங்கும் இறைமையுணர்வு அகத்தைச் சென்றடையாது தடுக்கும் தீங்கை விளைவிக்கும்.

எனவே நாம் அறிந்தவரையிலும், அறிஞர்களின் மதியுரைகளூடாகவும் எம்மால் இயன்றவரை இனிய செந்தமிழில் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது என்றே நம்புகின்றோம். தமிழ்ச் செல்வங்கள் இந்நூலைக் கருத்தூன்றிக் கற்றுத்தேறுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நகுலேசுவரி அரியரட்ணம்
மேலாளர்
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# புலம்பெயர் தமிழ் மாணவர் கற்கை நூல்

**மீள் நூலாக்கம் :**

செல்லர் தெய்வேந்திரன்
ஆயிலியம் நாகலிங்கம்
தங்கேஸ்வரி கெங்காதரன்
விக்னா பாக்கியநாதன்
ஜெகதீஷன் ஜெய்கிஷன்
கௌசலாதேவி லங்கேஸ்வரன்
சிவநேசன் அரவிந்த்
அருள்நிதி இராதாகிருஷ்ணன்
சிவபாதசுந்தரம் இளவழகன்
விஜயா செல்வநாயகம்
மல்லீஸ்வரி ஆதவன்
லதா தவராஜேஸ்வரன்
சர்வேஸ்வரி சோமசுந்தரம்
சின்னத்துரை கமலநாதன்

**நூல் வடிவமைப்பு :**

நிதி தேவராசா

செய்திட்ட நிறைவேற்றுநர் :

நகுலேசுவரி அரியரத்தினம்

**பதிப்புரிமை :** தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

published by
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL - FRANCE
1st Published 2009

Copyright © 2009 TEDC

All rights reserved. No part of this publication may be reproduced,stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise,without prior written permis of the publisher.

Printed in France
2 Allee maurice Audin
93390 Clichy sous bois
FRANCE

# உள்நிரல்


| பாடம் | பக்கம் |
|---|---|
| 01. தமிழிசை | 09 |
| இலக்கணம்: வினைச்சொல் | 14 |
| 02. கயிலை வன்னியன் (1644 -1678) | 15 |
| மொழி வளம்: சொற்றொடரும் சொல்லியமும் | 19 |
| 03. மருது பாண்டியனின் மாபெரும் தீரம் | 20 |
| மொழி வளம்: இரட்டைக்கிளவி | 24 |
| 04. ஆறுவது சினம் | 25 |
| இலக்கணம்: சொல்லிய உறுப்புகள் | 30 |
| 05. வீரஞ்செறிந்த வன்னி மண்ணும் தமிழரசுகளும் | 33 |
| மொழி வளம்: சொல்லிய வகைகள் | 38 |
| 06. தலையைக்காத்த தமிழ் | 40 |
| மொழி வளம்: அடுக்குத் தொடர் | 48 |
| 07. இலக்கிய இன்பம் | 49 |
| மொழி வளம்: தனிச்சொல்லியம், தொடர்ச்சொல்லியம் | 54 |
| 08. கத்தரித் தோட்டத்துக் காவலன் (கத்தரி வெருளி) | 56 |
| இலக்கணம்: எதிர்ப்பொருட்சொல், எதிர்ப்பாற்சொல் | 59 |
| 09. விபுலாநந்த அடிகள் | 60 |
| இலக்கணம்: வேற்றுமை | 66 |

10. மின்மினிப் பூச்சிகள் ............ 69
இலக்கணம்: உடன்பாடு - எதிர்மறைவினை ............ 73

11. விருந்தோம்பல் ............ 75
இலக்கணம்: இடைச்சொல் ............ 79

12. நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் ............ 80
இலக்கணம்: சுட்டெழுத்து, வினாவெழுத்து ............ 85

13. பல்சுவைப்பாடல்கள் ............ 87
இலக்கணம்: சொற்புணர்ச்சி ............ 91

14. இலங்கைத்தீவிலே தமிழர் ஆட்சியும் மாட்சியும் ............ 94
(கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரை)
மொழி வளம்: உவமையணி ............ 99

## பாடம் 1 தமிழிசை

மாந்தரின் உள்ளம் அழகுணர்ச்சி உடையது. இந்த உணர்ச்சியின் வெளிப்பாடே கலையாகும். கலை என்பது மக்களின் வாழ்வியல், பண்பாடு, நாகரிகம் என்பவற்றை எடுத்துக்காட்டுவது. முன்னாளில் தமிழர் கலைகளை அறுபத்து நான்காகப் பகுத்துப் போற்றிவந்தனர். சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம் என்பன அவற்றுட் சிலவாகும். இவற்றை அழகுக்கலை அல்லது நுண்கலை என்பர்.

அழகுக் கலைகளில் இசைக்கலை சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. இசை செவிவழியாக உள்ளத்தைக் கவர்ந்து களிப்பூட்டும். செவி வழியாக நுகரப்படும் இசை உயிர்களைத் தன்பால் ஈர்த்து இசைய வைப்பதால் அதற்குத் தமிழர் 'இசை' எனப் பெயரிட்டனர். அது மட்டுமன்றி பாட்டும் பண்ணும் தாளமும் மாறுபடாமல் ஒன்றோடொன்று இணைந்து இசைவதாலும் அதற்கு இசை என்று பெயர்.



ஒளியில் ஏழுவகையான நிறங்கள் இயங்குதல் போல், ஒலிகளும் ஏழுவகையாக இயங்குகின்றன. இவ்வொலி வகைகளுக்குப் பண்டைக் காலத்திலேயே நமது முன்னோர் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்று பெயரிட்டனர். இவ்வொலிகளைக் குறிப்பதற்கு முறையே ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழு நெட்டெழுத்துகளையும் பயன்படுத்தி வந்தனர். இப்பொழுது அவை வடமொழியால் 'சரிகமபதநி' எனப்படுகின்றன.

தமிழிசை பழைமையும் செழுமையும் மிக்கது. பழந்தமிழில் இசைக்கெனப் பல இலக்கண நூல்கள் இருந்தமையை இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகிறது. அவை காலத்தாலும் காப்பின்மையாலும் அழிந்து போயின. ஆனால், கல்வெட்டுகளாலும் குகை ஓவியங்களாலும் அறியப்படும் பழந்தமிழிசை பற்றிய செய்திகள் அழிக்கமுடியாத சான்றுகளாய் இன்றும் உள்ளன.

தமிழ்நாட்டில் அரசலூர், மலையடிப்பட்டி, திருமயம், குடுமியாமலை ஆகியஇடங்களில் இக்கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் ஐந்து இசைத்தூண்கள் உள்ளன. ஒவ்வொரு தூணும் இருபத்திரண்டு மெல்லிய தூண்களால் ஆனது. அத்தூண்களிலே மெல்லெனத் தட்டினால் இனிய இசை தோன்றும். ஒவ்வொரு தூணும் வெவ்வேறு இசையை ஒலிக்கின்றன. அதேபோல் திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயத்திலும் மதுரை ஆயிரங்கால் மண்டபத்திலும் இசைத்தூண்கள் உள்ளன. மதுரை ஆயிரங்கால் மண்டபத்தில் ஓர் அன்னப்புள்ளின் கற்சிலை உள்ளது. அச்சிலையில் தட்டினால் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு இசை ஒலிக்கும். இவ்வாறு, கல்லிலே இசை தொனிக்க வைக்கும் இசைநுட்பத்தை அறிந்திருந்தோர் தமிழர்.

சிலப்பதிகாரம் என்பது ஒரு பழந்தமிழ் நூல். கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் எழுதப்பட்டுள்ளது. இந்நூலில் மிக ஆழமாக, அழகு தமிழால் இசைநுணுக்கம் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுக் காதையிலே வருகின்ற தமிழருடைய இசைக்கருவிகளும் தமிழர் இசைத் தொன்மைக்குச் சான்றாகும். அவை தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி எனப் பலவாகும். அவை இசையின் ஒலி வேறுபாடு நோக்கி, தம்முட் பலவகையாகப் பெருகியுள்ளன. கைகளால் கொட்டுதல், தட்டுதல், சுண்டுதல், வாயால் ஊதுதல், பாடுதல் ஆகிய பல்வேறு வழிகளால் தமிழர் இசையெழுப்பினர்.

முத்தமிழின் உறுப்பாக இசைத்தமிழ் இருக்கிறது. இசை பற்றிய கல்வெட்டுகள் தமிழர் வரலாற்றில் காணப்படுகின்றன. தமிழரது சிற்பக்கலையில் இசைத்தூண்கள் இடம்பெறுகின்றன. பல இசை இலக்கண நூல்கள் முன்னாளில் இருந்தமை அறியப்பட்டிருக்கிறது. சிலப்பதிகாரம், இசைக்கருவிகளைப் பற்றியும் அவற்றை இயக்குவோரின் திறன்களையும் தெளிவாகக் கூறுகிறது. தமிழர் பதினோராயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றியொரு (11991) வகையான இசைகளை அமைத்திருந்தனர். இவையெல்லாம் எம்முன்னோரின் இசைப் பேரறிவுக்கு அசைக்கமுடியாத சான்றுகளாகும்.

## அருங்குறிப்பு:

- அழகுக் கலைகளில் இசைக்கலை சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது.
- இசைக்கு இலக்கணநூல்கள் இருந்தன.
- கல்லிலும் இசையெழுப்பும் இசைநுட்பத்தைத் தமிழர் அறிந்திருந்தனர்.
- கல்வெட்டுகளும் குகை ஓவியங்களும் இதற்குச் சான்றாக இன்றும் உள்ளன.
- சிலப்பதிகாரம் இசைபற்றி மிக விரிவாகக் கூறியுள்ளது.

## கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. தமிழர் கலைகளை எத்தனை வகையாக வகுத்தனர்?
2. நுண்கலைகள் என்று அழைக்கப்படுவன யாவை?
3. எழுவகை ஒலிகளையும் குறிப்பதற்கு நம் முன்னோர் பயன்படுத்திய எழுத்துகள் எவை? அவை இப்பொழுது எவ்வெழுத்துகளால் குறிக்கப்படுகின்றன?
4. ஏழிசைகள் பற்றிய செய்திகள் குறிக்கப்பட்ட கல்வெட்டுகள் எங்கெங்கு உள்ளன?
5. இசைத்தூண்களின் சிறப்பு யாது?
6. அன்னப்புள்ளின் கற்சிலை எங்கே உள்ளது?
7. உமக்குத் தெரிந்த இசைக் கருவிகள் மூன்று எழுதுக.

## சொற்பொருள்:

| | | |
|---|---|---|
| இசைதல் | - | ஒத்துப்போதல், இசைவாதல், ஒன்றுதல் |
| புள் | - | நீர்ப்பறவை |
| கஞ்சம் | - | வெண்கலம் என்னும் மாழை. |
| நுண்கலை | - | நுணுக்கமான கணிதக் கலைகள் |
| செழுமை | - | வளம், செழிப்பு (சிறந்திருத்தல்) |
| காப்பின்மை | - | பேணுதல் இன்மை |

## குறிப்பு:

தோற்கருவி: மேளம், முழவு போன்ற தோலினாலான பகுதியைக் கொண்ட இசையெழுப்பும் கருவிகள்.

துளைக்கருவி: நாதசுரம் (நாகசுரம்) புல்லாங்குழல் போன்ற துளைகளால் இசையெழுப்பும் கருவிகள்.

நரம்புக்கருவி: நரம்பினால் இசையெழுப்பும் பல்வேறு யாழ் வகைகள்.

கஞ்சக்கருவி: வெண்கலத்தினாலான கைத்தாளம் போன்றவை.

## பழமொழி:

**அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு**

(வலிமை அற்றோரும் ஒன்றுகூடின் வலிமை பெறுவர்)

*அடம்பன் கொடி என்பது கடற்கரை உவர்மணலில் வளரும் வலிமையற்ற ஒரு கொடி. பிடித்து இழுத்தால் உடனே அறுந்துவிடும். ஆனால், அக்கொடிகள் பல ஒன்றாகச் சேர்ந்தால் வலிவு பெறுகின்றன.*

## திருக்குறள்:

பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

*அதிகாரம் 11 - குறள் 103*

*கைம்மாறு கருதாதவர்கள் செய்த உதவியின் சிறப்பை ஆய்ந்தால் அவ்வுதவியின் பயன் சிறிதாயினும் அதன் சிறப்பு கடலினும் பெரியதாகும்.*

# இலக்கணம்

## வினைச்சொல்

வளவன் பாடினான்.

வளவன் பாடுகிறான்.

வளவன் பாடுவான்.

மேலே உள்ள சொல்லியங்களில் வரும் பாடினான், பாடுகிறான், பாடுவான் என்னும் சொற்கள் ஒரு செயலைக் குறிப்பதால் அவை வினைச்சொற்கள் எனப்படும். (வினை என்பது செயல்)

'பாடினான்' என்ற வினைச்சொல் நடந்து முடிந்த ஒருசெயலைக் குறிப்பிட்டு இறந்தகாலத்தைக் காட்டுகிறது. 'பாடுகிறான்' என்ற வினைச்சொல் நடந்து கொண்டிருக்கிற செயலைக் குறிப்பிட்டு நிகழ்காலத்தைக் காட்டுகிறது. 'பாடுவான்' என்ற வினைச்சொல் நடக்கப் போகும் செயலைக் குறிப்பிட்டு எதிர்காலத்தைக் காட்டுகிறது. இவ்வாறாக வினைச்சொல் மூன்று காலங்களையும் காட்டும். காலங் காட்டுவது வினைச்சொல்லின் சிறப்பிலக்கணமாகும்.

'பாடினான்', 'பாடுகிறான்', 'பாடுவான்' ஆகிய வினைச்சொற்கள் திணை, பால், எண், இடம் காட்டும் விகுதி பெற்று, முற்றுப் பெற்று நிற்பதைக் காணலாம். அவ்விதம் முற்றுப்பெற்றமையைக் காட்டும் வினைச்சொல் வினைமுற்று எனப்படும்.

ஓடிய பிள்ளை.

பாடி மகிழ்ந்தோம்.

விழுந்து எழும்பினான்.

மேலே உள்ள சொற்றொடர்களில் ஓடிய, பாடி, விழுந்து என்னும் சொற்கள் முற்றுப்பெறாது குறைவினையாக (எச்சம்) உள்ளன. குறைவினையை எச்சவினை என்றும் அழைப்பர். இது பெயரெச்சம், வினையெச்சம் என இரண்டாக அமையும்.

பாடம் 2

# கயிலைவன்னியன்



## ஆட்சிக்காலம் 1644 - 1678

வன்னிமண்ணை ஆட்சி செய்த மன்னர்களில் கயிலைவன்னியனின் ஆட்சிக்காலத்தை, வன்னி வரலாற்றின் பொற்காலமாகக் கொள்ளலாம். கயிலைவன்னியன் 'கயிலாயவன்னியன்' என்றும் அழைக்கப்பட்டான். போர்த்துக்கேயரின் ஆட்சியின்போதும் ஒல்லாந்தரின் ஆட்சியின்போதும் அவர்களுக்குத் தலை வணங்காமல், திறை செலுத்தாமல் வன்னியின் பனங்காமம் பற்றிலிருந்து ஆயிரத்து அறுநூற்று நாற்பத்து நான்காம் (1644) ஆண்டு முதல் முப்பத்துநான்கு ஆண்டுகள் தனது வலிமையான ஆட்சியை நடத்தி வந்தான்.

இவன் ஆட்சி தொடங்கியதில் இருந்து யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயரது ஆட்சியின் இறுதிக்காலம் வரை, பதினான்கு ஆண்டுகள் அவர்களது கட்டளைகளுக்கு அடங்காது, அவர்களுக்குத் திறை செலுத்த மறுத்து வந்தான். அதுபோன்றே ஒல்லாந்தரது

ஆட்சிக் காலத்திலும் தன் வாழ்வின் இறுதிவரை அவர்களுக்கு அடங்கவோ திறை செலுத்தவோ அவர்களின் கட்டளையை ஏற்று யாழ்ப்பாணம் செல்லவோ மறுத்து வந்தான். இதனை ஒல்லாந்து ஆளுநர் தோமசு வான்றி (Thomas Wantry) தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

வன்னியின் ஆற்றல்மிக்க மன்னனாகத் திகழ்ந்த கயிலைவன்னியனுடன் கண்டி மன்னன் இரண்டாம் இராசசிங்கன் நட்புப் பூண்டிருந்தான். வன்னிப்பகுதி ஏழு பற்றுகளாகப் பிரிக்கப்பட்டு வெவ்வேறு மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்டது. எனினும், வன்னிக்கு மாற்றாரினால் அச்சுறுத்தல் என்ற நிலை ஏற்பட்டபோது, அனைவரும் கயிலைவன்னியன் தலைமையில் ஒன்று சேர்ந்து வன்னியைக் காத்தனர். வன்னியின் ஏனைய சிற்றரசுகளுக்கிடையே கயிலைவன்னியனது பனங்காமம்பற்று அரசு பேரரசாக மதிக்கப்பட்டது. ஆங்கிலேயரான றொபேட் நொக்சு (Robert Knox) அவர்கள் தமது இலங்கையின் வரைபடத்தில் கயிலைவன்னியனின் ஆட்சிப் பகுதி தென்கிழக்கே கொட்டியாரத்தையும் உள்ளடக்கிப் பரந்து இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். அவர் கண்டிச்சிறையிலிருந்து தப்பிச் செல்கையில் ஆற்றல் மிக்க கயிலைவன்னியனுக்கு அஞ்சி, வடபகுதிக்குச் செல்லாது அநுராதபுரத்துக்குச் சென்றார். அங்கிருந்து மேற்காக அரிப்பு என்ற இடத்துக்குச் சென்று தன் தாய்நாட்டிற்குச் சென்றார்.

கயிலைவன்னியன் தம் ஆட்சிப்பகுதியான யாழ்ப்பாணத்தின் மீது படையெடுக்கக் கூடுமென்று அஞ்சியே, போர்த்துக்கேயர் வெற்றிலைக்கேணியில் 'பெங்சூற்றர்' என்னும் கோட்டையையும் ஆனையிறவில் 'பைல்' என்னும் கோட்டையையும் அமைத்ததாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கயிலைவன்னியன் முப்பத்துநான்கு ஆண்டு காலம் வீரஞ்செறிந்த ஆட்சி செய்தான். இவன் கி.பி. ஆயிரத்து அறுநூற்று எழுபத்தெட்டாம் (1678) ஆண்டில் இயற்கைச் சாவு எய்தினான்.

## கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. கயிலைவன்னியன் எத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்தான்?
2. கயிலைவன்னியனுடன் நட்புப் பூண்டிருந்த கண்டி மன்னன் யார்?
3. கண்டிச் சிறையிலிருந்து தப்பிச் சென்ற ஐரோப்பியனது பெயர் என்ன?
4. கயிலைவன்னியனது ஆட்சி எதுவரை பரந்திருந்தது?
5. கயிலைவன்னியனுக்கு அஞ்சிப் போர்த்துக்கேயர் எங்கெங்கே கோட்டைகள் கட்டினர்?
6. கயிலைவன்னியன் காலத்தில் வன்னி எத்தனை பற்றுகளாக இருந்தது?
7. கயிலைவன்னியன் ஆண்ட வன்னிப் பகுதியின் பெயர் என்ன?

## சொற்பொருள்:

திறை - வரி

ஆளுநர் - ஆட்சி அதிகாரி

பற்று - பெருநிலப்பரப்பு

## பழமொழி:

அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை.

*(மனநிறைவற்ற நிலை)*

## மூதுரை:

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிடம் எல்லாம் சிறப்பு.

- ஔவையார்

மன்னனதும் கசடறக் கற்றவனதும் சிறப்பை ஒப்பிட்டுப் பார்த்தால், அரசனைக் காட்டிலும் கற்றவனே மேலானவன். மன்னனுக்குத் தன்னுடைய நாட்டில் மட்டுமே சிறப்பு உண்டு. கற்றவனுக்கோ அவன் செல்லும் நாடுகளில் எல்லாம் சிறப்பு உண்டாகும்.

(மாசற, கசடற - குற்றம் இன்றி)

## மொழி வளம்

### சொற்றொடரும் சொல்லியமும்

1. சிறியவள் பயம் தெளிந்து... - சொற்றொடர்

2. குழலி தண்ணீரிலே தன் காலை நனைத்தாள். - சொல்லியம்

மேலே தரப்பட்ட எடுத்துக்காட்டுகள் இரண்டிலும் சொற்கள், பொருள் இயைபுபட ஒன்றையொன்று தொடர்ந்து வந்திருப்பதைக் காணலாம். அவற்றிலே முதலாவது எடுத்துக்காட்டில் கருத்து முற்றுப்பெறவில்லை. இரண்டாவது எடுத்துக்காட்டிலே சொற்கள் பொருள்படத் தொடர்ந்து கருத்து முற்றுப்பெற்று நிற்கிறது.

இவ்வாறு சொற்கள் பொருள்படத் தொடர்ந்து, கருத்து முற்றுப்பெற நிற்பது சொல்லியம் எனப்படும். கருத்து முற்றுப் பெறாது ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வருவது சொற்றொடர் எனப்படும்.

எ-கா: 1. அல்லியும் சங்கவியும்...
2. கூட்டத்திலே அகப்பட்ட சிறுமி...
3. சங்கவியின் தாய் பதறி...

இச்சொற்றொடர்களையும் பின்வருமாறு சொல்லியங்கள் ஆக்கலாம்.

1. அல்லியும் சங்கவியும் வந்தனர்.
2. கூட்டத்திலே அகப்பட்ட சிறுமி நெரிந்தாள்.
3. சங்கவியின் தாய் பதறிக் கொண்டு ஓடினாள்.

எனவே, சொல்லியங்கள் வினைமுற்றைக்கொண்டு முடிக்கப்பட்டிருக்கும் என்பதையும் அவற்றில் கருத்தொன்று முற்றுப்பெற்றிருக்கும் என்பதையும் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

பாடம் 3

# மருதுபாண்டியனின் மாபெரும் தீரம்

(உண்மை நிகழ்வு)



தமிழகத்திலுள்ள திண்டுக்கல் நகருக்கு அண்மையில் உள்ளது தோமையாபுரம். இச்சிற்றூரில் முருகேசன் என்னும் ஓர் ஏழை வணிகன் வாழ்ந்து வருகிறார். அவருடைய மகன் மருதுபாண்டியன். அவனுக்குப் பதின்மூன்று அகவை. சென்.சேவியர் பள்ளியில் எட்டாம் வகுப்புப் படிக்கும் மாணவன்.

மருதுபாண்டியன் ஒருநாள் தன் இரண்டு அகவைத் தங்கையையும் அழைத்துக் கொண்டு, தொடருந்து இரும்புத்தடம் அருகே விளையாடச் சென்றான். அவர்கள் விளையாடிக் கொண்டிருக்கும்போது திடீரென்று இரும்புத் தடத்திலிருந்து பேரோசை ஒன்று கேட்டது.

உடனே மருதுபாண்டியன் ஓசை கேட்ட இடத்திற்கு ஓடிச்சென்று, என்ன அது? என்று வியப்புடன் உற்று நோக்கினான். அங்கே இரும்புத்தடம் இரண்டாகப் பிளந்து இருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தான். ‘ஐயையோ! இரும்புத்தடம் உடைந்து விட்டதே! இவ்வேளை தொடருந்து வந்தால், திடுநேர்கை ஏற்பட்டுப் பலர் இறக்கக் கூடுமே’ என்று மருது எண்ணினான். உடனே தொடருந்துக் கடவைக் காவலரிடம் சொல்வதற்கு, தங்கையைத் தூக்கிக் கொண்டு ஓடினான். அவ்வமையம் எதிர்த்திசையில் ஒரு கடுகதித் தொடருந்து வருவதைக் கண்டான். ‘ஐயோ! என்ன செய்வது? உடனே அந்தத் தொடருந்தை நேரிடரிலிருந்து காப்பாற்ற வேண்டுமே’ என அச்சிறு பிஞ்சு உள்ளத்தில் அறிவு விரைந்து வேலை செய்தது.

உடனே தன் தங்கை ரேவதி அணிந்திருந்த சிவப்புச் சட்டையை உருவிக் கழற்றினான். கழற்றிய சட்டையைக் கையில் ஏந்தியவாறு ஓடிச்சென்று, இரும்புத்தடம் பிளந்திருந்த இடத்திலே நின்று,

அச்சட்டையை ஆட்டியாட்டி எச்சரிக்கை செய்தான். நிலைமையைப் புரிந்து கொண்ட தொடருந்து ஓட்டுநர் பெரும் அல்லற்பட்டுத் திடீரென தொடருந்தை நிறுத்தினார். தொடருந்து தடவெடிப்பில் இருந்து முப்பது மீற்றருக்கு முன் வந்து நின்றது. அதுவரை மருதுபாண்டியன் தொடருந்து எதிர்நோக்கி வருவதைக் கண்டும் அஞ்சாமல், தடத்தில் நின்றிருந்தான். இவனுடைய இத்தீரச் செயலால் பல நூற்றுக்கணக்கான மக்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டன.

திடீர் நிறுத்தம் கரணியமாக இருப்புப் பாதையில் தீப்பொறி பறக்க பெருத்த பேரிரைச்சலுடன் சடுதியாய்த் தொடருந்து நிறுத்தப்பட்டது. உடனே தொடருந்துச் செலவர்கள் ஒருவரோடு ஒருவர் இடிபட்டு விழுந்து எழும்பினர். ஏதோ திடுநேர்கை நிகழ்ந்துவிட்டதென எண்ணி அவலக்குரல் எழுப்பியவாறு தொடருந்தை விட்டு இறங்கினர். ஒருவரையொருவர் பற்றிக்கொண்டு செய்வதறியாது ஏங்கி நின்றனர்.

தொடருந்துக்காவலர் மிகுந்த இடர்ப்பாடுபட்டு மக்களை அமைதிப்படுத்தினர். நேரவிருந்த பேரிடரையும் அதைத் தடுத்து மக்களைக் காப்பாற்றிய சிறுவனைப்பற்றியும் எடுத்துக்கூறி, மருதுபாண்டியனைக் காட்டினர். அந்தச் சிறுவனின் தீரச்செயலால் தங்கள் உயிர்கள் காப்பாற்றப்பட்டதை எண்ணி மக்கள் உருகினர். திரண்டடித்து மருதுவையும் ரேவதியையும் தூக்கிக்கொண்டு கூத்தாடினர். மருதுவின் தங்கை ரேவதி ஒன்றும் புரியாமல் அழத்தொடங்கினாள். மக்கள் மகிழ்ச்சிப்பெருக்கால் அக்குழந்தைகளின் கைகொள்ளாமல் இனிப்புப் பண்டங்களை வழங்கினர்.

நீண்டநேரமாக விளையாடப்போன பிள்ளைகள் வீடுதிரும்பாததைக் கண்ட தந்தை முருகேசன் அவர்களைத் தேடிச் சென்றார். தொடருந்துத் தடத்தில் மக்கள் ஆரவாரத்தையும் பரபரப்பையும் கண்டு, என்னவோ! ஏதோ என்று ஓடிப்போனார். அங்கே தன்பிள்ளைகள் மக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்தினுள் திணறுவதைக் கண்டார். அளவிலா மகிழ்ச்சி அடைந்தார். முருகேசனே அக்குழந்தைகளின்

தந்தையெனத் தெரிந்து கொண்ட மக்கள் அவருக்கும் அன்பளிப்புகள் வழங்கினர். முருகேசன் தான் பெற்றபேற்றை எண்ணி மகிழ்ந்தபடி பிள்ளைகளை அணைத்துக்கொண்டு வீடு திரும்பினார். அன்று தோமையாபுரம் முழுவதும் விழாக்கோலம் பூண்டு கொண்டாடிக் களித்தது.

மருதுபாண்டியனின் தாய் ஈன்றபொழுதிற் பெரிதுமுவந்து, பேரின்பம் கண்களில் வழிய நின்றாள்.

2008ஆம் ஆண்டு டிசம்பர் இருபத்தாறாம் நாள் (26.12.2008) இந்திய தேசிய தீரச் செயலுக்கான பட்டயம் அளித்துப் பாராட்டப்பட்டான் மருதுபாண்டியன். அவ்விழாவிலே இந்திய தலைமை அமைச்சர், இந்திய மக்களதிபதி ஆகியோர் கலந்து கொண்டு மருதுபாண்டியனைப் பாராட்டினர். இவ்வாறு ஒவ்வொரு சிறாரும் இத்தகைய மனத்துணிவை வளர்த்துக் கொண்டு உயர்ந்து விளங்க வேண்டும்.

## கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. மருதுபாண்டியன் எங்கே வாழ்கிறான்?
2 மருதுபாண்டியன் விளையாடச்சென்ற இடம் எது?
3. பேரோசை எங்கிருந்து கேட்டது?
4. அவன் எவ்வாறு தொடருந்தைத் திடீரென நிறுத்தினான்?
5. மருதுபாண்டியனின் வீரதீரச் செயலுக்கான பட்டயம் எப்பொழுது கிடைத்தது?
6. அஞ்சாமை, அல்லல், கடுகதி என்னும் சொற்களை வைத்துச் சொல்லியம் எழுதுக.
7. இக்கதையிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது என்ன?

## சொற்பொருள்:

| | | |
|---|---|---|
| தீரம் | - | நிலைகலங்காத்துணிவு |
| செலவர் | - | தூர இடம் செல்பவர் (வழிப்போக்கர் ) |
| இரும்புத்தடம் | - | தொடருந்து வழி |
| திடுநேர்கை /நேரிடர் | - | திடீரென்று நிகழும் ஊறு |
| மக்களதிபதி | - | ஆள்வோர், மக்கள் அனைவருக்கும் தலைவர் |
| கடுகதி | - | மிகுவிரைவு |
| அல்லல் | - | துன்பம் |
| தலைமை அமைச்சர் | - | நாடாளும் மந்திரிகளின் தலைவர் |
| பட்டயம் | - | அதிதிறனுக்குரிய சான்றிதழ் (பேணிப்போற்றுதற்குரிய ஆவணம்) |

## பழமொழி

முதலையும் முருடனும் கொண்டது விடா.

*(முதலை பிடித்ததை விடாது, அதுபோல் கடுஞ்சினங் கொண்டவனும் தான் கொண்ட எண்ணத்தை விடான்)*

## திருக்குறள்

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

*அதிகாரம் 13 - குறள் 127*

*எதைக் காக்க முடியாவிட்டாலும் நாவைக் காக்கவும். அவ்வாறு காப்பாற்றாவிடின் சொற்குற்றத்துக்கு உட்பட்டுத் துன்பப்படுவர்.*

## மொழி வளம்

### இரட்டைக்கிளவி

இலக்கியன் திருதிரு என்று விழித்தான்.
ஆற்றுநீர் சலசல என்று ஓடியது.

இச்சொல்லியங்களில் வந்துள்ள திருதிரு, சலசல என்பன இரட்டைக்கிளவிகளாகும். இவை ஒட்டி நின்றே பொருள் உணர்த்துவன. தனித்தனியே பிரிந்து நின்று பொருள் தரா.

ஒரே ஒலி இரட்டித்து வருவதாய் அமையும் இவ்வொலிச் சேர்க்கை ஓர் ஒலியை, ஒரு தோற்றத்தை, ஓர் இயக்கத்தை அல்லது ஏதேனும் ஓர் உணர்வைக் குறிப்பாகக் காட்டுகிறது. அந்த ஒலிச்சேர்க்கைகள் இரட்டைக்கிளவி எனப்படும். நமது அன்றாடப் பேச்சில் ஆயிரக்கணக்கான ஒலிக் குறிப்புகளைப் பயன்படுத்துகின்றோம். சிலவேளை நாமே புதிய சூழ்நிலையில் புதிய ஒலிக்குறிப்புகளை உண்டாக்கி விடவும் கூடும். இவற்றை நாம் வலிந்து பயன்படுத்த வேண்டியதில்லை. தானாகவே தக்கவேளையில் இவை நம் பேச்சிலும் எழுத்திலும் இடம் பெறும். இவ்வாறான இரட்டைக்கிளவிகள் தமிழ்மொழியை வளமுடனும் உணர்வு வெளிப்படப் பேசவும் எழுதவும் உதவுகின்றன.

எ+கா:

| | | |
|---|---|---|
| பளபள | விறுவிறு | சலசல |
| நறநற | புறுபுறு | குபுகுபு |
| மளமள | தடதட | குளுகுளு |
| கணகண | சிடுசிடு | வழுவழு |
| தொணதொண | கடகட | கரகர |

## பாடம் 4 ஆறுவது சினம்

மாந்தர் போற்றிப் பேண வேண்டிய நற்பண்புகளில் சினங்காத்தல் என்னும் பண்பு தலையாயது. தமிழ்கூறும் நல்லுலகச் சான்றோர் பலரும் சினங்காத்தல் என்னும் பண்பு குறித்து, உவமை நயங்களுடன் அருமையாக விளக்கிக் கூறியிருக்கின்றனர்.

உலகப்பொதுமறை தந்த வான்புகழ் வள்ளுவர், சினங்காத்தல் என்னும் பண்பினைக் கடைப்பிடிக்குமாறு வலியுறுத்தி 'வெகுளாமை' என்றோர் அதிகாரத்தையே பாடியுள்ளார். வெகுளாமையில் பத்துக் குறட்பாக்களால் சினங்காத்தலின் அகத்தியத்தைக் கருத்துச் செறிவோடு கூறியுள்ளார். சினத்தைத் தீயாக உருவகப்படுத்திச் சினத்தீயினால் விளையும் தீமைகளை விளக்கிக் கூறியுள்ளார்.

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்.

*அதிகாரம் 31- குறள் 306*

*சினம் என்னும் தீப்பண்பு யாரிடத்தில் தோன்றுகிறதோ, அது அவரை அழிப்பதோடு சுற்றம் எனும் அவரது காப்புக்குரிய துணையையும் எரிக்கும்.*

தீயானது தீப்பிடித்த இடத்தை மட்டும் அழிப்பதோடு நில்லாது, சுற்றுப்புறங்களையும் சேர்த்து அழித்துவிடும். அதுபோன்றே சினமானது, சினம் கொண்டவரை மட்டுமல்லாமல் உற்றார் உறவினரையும் சேர்த்து அழித்துவிடும் என்று, சினம் கொள்வதனால் விளையக்கூடிய தீமையைச் சுட்டிக்காட்டி எச்சரிக்கிறார் வள்ளுவர். மேலும் ஒருவருடைய அகமலர்ச்சியையும் முகமலர்ச்சியையும் கொல்கிற சினத்தைவிட ஒருவருக்குப் பகையானது வேறு எவையேனும் உளவோ? என்று விளக்கி வினவுகிறார். ஆதலால், ஒருவர் எப்போதும் சினங்காத்தல் என்னும் பண்பினைப் போற்றிப் பேணிக்காத்தல் வேண்டும்.

ஒருவன் தன்னைத் தான் காத்துக் கொள்வதற்குச் சினத்தைக் காக்கவேண்டும். அவ்வாறு சினத்தைக் காக்கத் தவறினால், அந்தச் சினம் கொண்டவனையே கொன்றுவிடும். இவ்வாறு பொய்யாமொழி தந்த வள்ளுவர் உலகமக்களை அச்சுறுத்தி எச்சரிக்கிறார். சினங்காத்தலிலும் இருவேறு வகையான கருத்துகளை மிகத் தெளிவாக அவர் கூறுகிறார். ஒன்று தனக்கும் சுற்றத்துக்கும் தீங்கு விளையாமல் சினத்தைக் காப்பது, மற்றையது தன்னில் மெலிந்தவருக்குத் தீங்கு செய்யாமல் சினத்தைக் காப்பது.

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென்.

*அதிகாரம் 31- குறள் 301*

*எங்கே தன் சினம் செல்லுபடியாகுமோ அங்கேதான் ஒருவன் தன்னுடைய சினத்தை அடக்கிக் கொள்ளவேண்டும். அதாவது தன் சினத்திற்கு அஞ்சக்கூடிய வலிமை குறைந்தவனிடத்தில் சினத்தை அடக்கிக் கொள்ளவேண்டும். தன் சினத்துக்கு அஞ்சாத தன்னிலும் வலியவனிடத்தில் ஒருவன் சினங்கொண்டால், அது கொண்டவனுக்கே இடுக்கண் விளைவிக்கும்.*



சினங்காத்தலைப் பற்றி அழகான உவமையுடன் கூறும் அறிவுக் கருவூலமான நன்னெறிப் பாடல் ஒன்று.

உள்ளங் கவர்ந்தெழுந்து ஓங்குசினங் காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க - வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு.

- சிவப்பிரகாச அடிகள்

*உள்ளத்தை ஈர்த்து, எழுந்து பொங்கும் சினத்தைக் காத்துக்கொள்ளும் குணமே நற்பண்பு என்க. வெள்ளத்தைத் தடுப்பது பெரிய செயலோ? அவ்வெள்ளத்தைத் தடுக்கும் அணையை உடைத்து விடுதலோ பெரிய செயல்? சொல்!*

பாய்ந்துவரும் வெள்ளத்தால் அழிவேற்படாமல் வெள்ளத்தைத் தடுக்கும் செயல் அரிய செயலோ? அன்றி அணையிட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள வெள்ளத்தை, அணையைப் பெயர்த்துப் பாயவிடுதலோ அரியசெயல்? வெள்ளத்தைத் தடுப்பதே அருஞ்செயல். அதுபோல், உள்ளத்தை ஈர்த்து மூண்டெழும் சினத்தை அடக்குவதே நற்பண்பாகும். அச்சினத்தை அடக்காவிடின் அது தீங்கை விளைவிக்கும்.

'அறிவுக்குப் பகை சினம்' என்ற சான்றோர் கூற்றை, இளம் தலைமுறையினர் கைக்கொண்டு வாழ்தல் வேண்டும். ஔவையின் ஆத்திசூடி சினங்காத்தலை 'ஆறுவது சினம்' என இரண்டே இரண்டு சொற்களில் அழகுறக் கூறுகிறது.

இதன் மூலம் தேவையற்ற உணர்வுகளால் பொங்கி எழுந்து சினங்கொள்வதை நாம் தவிர்க்கவேண்டும். ஆனால், தன்மானத்திற்கும் இறைமைக்கும் தீங்கு உண்டாக்கப்படும் பொழுது அதனை எதிர்த்து நின்று போராடுதல் வீரமும் கடமையுமாகும். எனவே, சினம் வேறு வீரம் வேறு என்பதை நாங்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

## கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. திருக்குறளின் சிறப்புப் பெயர்கள் இரண்டினைத் தருக.
2. சினங்காத்தல் பற்றிக் கூறும் திருக்குறளின் அதிகாரம் எது?
3. தன்னைத்தான் காக்க விரும்புபவன் எதைக் காத்தல் வேண்டும்?
4. ‘சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி’ என்னும் குறள் மூலம் வள்ளுவர் சொல்ல வருவது யாது?
5. நன்னெறிப் பாடலில் சினங்காத்தலுக்கு ஒப்பிடப்படும் செயல் என்ன?
6. சினங்காத்தலை ஔவையார் இரு சொற்களில் எப்படிக் கூறுகிறார்?
7. சினம் என்பது பற்றிய உமது கருத்து என்ன?

## சொற்பிரிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| செல்லிடம் | = | செல் | + | இடம் |
| அல்லிடம் | = | அல் | + | இடம் |
| கவர்ந்தெழுந்து | = | கவர்ந்து | + | எழுந்து |
| காவாக்காலென் | = | காவாக்கால் | + | என் |
| குணமென்க | = | குணம் | + | என்க |
| தடங்கரை | = | தடம் | + | கரை |

## சொற்பொருள்:

| | | |
|---|---|---|
| வெகுளல் | - | அடங்காச் சினம் கொளல் |
| அகத்தியம் | - | இன்றியமையாதது |
| தடம் | - | அகன்ற, உயர்ந்த |
| தடங்கரை | - | அகன்றுயர்ந்த அணை |
| ஏமம் | - | காவல், காப்பு |
| புணை | - | மிதவை, கட்டுமரம் போன்றவை |
| சுடும் | - | அழிக்கும், எரிக்கும் |
| அல்லிடம் | - | அல்லாத இடம் |
| காவாக்காலென் | - | காக்காது விட்டாலென்ன |
| இடுக்கண் | - | துன்பம், பேரிடர் |
| ஈர்த்து | - | இழுத்து (மனதைக்கவர்ந்து) |
| கருவூலம் | - | உயர் செல்வங்களைப் பேணும் இடம் |
| பேர்த்து | - | பெயர்த்து, உடைத்துப் புரட்டி |
| விளம்பு | - | விளக்கிச் சொல் |
| உத்தி | - | வழிமுறை |
| நயம் | - | அழகு |

## பழமொழி

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.

*(ஒற்றுமை நலன் விளைக்கும்)*

## மூதுரை:

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே - அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர்.

- ஔவையார்

நல்லவர்க்குச் செய்த உதவியானது, கல்லில் செதுக்கிய எழுத்துப் போல நிலையாக இருக்கும். அன்பு இல்லாதவருக்குச் செய்த உதவியானது, தண்ணீரில் எழுதிய எழுத்தைப் போல் பயன் இல்லாமல் அப்பொழுதே மறைந்துபோகும்.

# இலக்கணம்

## சொல்லிய உறுப்புகள்

சொற்கள் பொருள்படத் தொடர்ந்து நின்று ஒரு கருத்தை முழுமையாக வெளிப்படுத்துவது சொல்லியமாகும். சொல்லியத்தின் முதன்மையான உறுப்புகள் எழுவாயும் பயனிலையும் ஆகும்.

ஒரு சொல்லியத்தில், அதன் கருத்து எழும் இடம் எழுவாய். எழுவாய், பயனிலையுடன் முடியும்போதே சொல்லியம் முழுமை பெற்றுக் கருத்து வெளிப்படுகிறது. சொல்லியத்தின் எழுவாயானது முடிக்கும் பகுதியைக் கொண்டே நிறைவு பெறும். அவ்வாறு கருத்து முற்றுப்பெற்று நிற்கும் இடம் பயனிலை எனப்படும்.

எ - கா: கண்ணன் சிரித்தான்.

இதில் சிரித்தவன் யார்? கண்ணன். இங்கு கண்ணன் எழுவாய். எழுவாயின் கருத்து முற்றுப் பெற்று நிற்கும் இடம் ‘சிரித்தான்’. இங்கு ‘சிரித்தான்’ பயனிலை.

பயனிலையோடு தொடர்புபட்டதாகச் சொல்லியத்தில் அமையும் இன்னொரு உறுப்பு செயப்படுபொருளாகும்.

எ - கா: ஆசிரியர் வருகிறார்.
ஆசிரியர் பாடம் கற்பிக்கிறார்.

இச்சொல்லியங்கள் இரண்டும் ஆசிரியர் என்னும் சொல்லை எழுவாயாகக் கொண்டவை. ஆனால், முதலாவது சொல்லியத்தில் உள்ள 'வருகிறார்' என்னும் பயனிலை, இரண்டாவது சொல்லியத்தில் உள்ள 'கற்பிக்கிறார்' என்னும் பயனிலையிலிருந்து ஒருவகையில் வேறுபட்டுள்ளது. வருகிறார் என்பது செயலுக்குரிய பொருள் ஒன்றைக் கொண்டிருக்கவில்லை. ஆனால், கற்பிக்கிறார் என்பது அவ்வாறன்று. கற்பித்தலோடு தொடர்புடைய செயலுக்குரிய பொருள் ஒன்றைத் தெளிவாக உணர்த்துகிறது.அதாவது பாடத்தைக் கற்பிக்கிறார். இச்சொல்லியத்தில் வரும் 'பாடம்' என்பது செயப்படுபொருள்.

அவ்வாறாகச் சொல்லியத்தில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய சொல்லிய உறுப்புகளை நாம் இனங்காணலாம்.

## எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், அடைமொழிகள்

சொல்லியத்திலே அகத்திய உறுப்புகளாக எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பன இடம்பெறும். அவ்வுறுப்புகளுடன் அவற்றின் அடைமொழிகளும் இடம்பெறுவதுண்டு.

அவை: எழுவாய் அடைமொழி
பயனிலை அடைமொழி
செயப்படுபொருள் அடைமொழி என மூவகைப்படும்.

எ - கா:
1. வெள்ளைத் தாமரை மலர்ந்திருந்தது.
2. காற்று மெல்லென வீசியது.
3. திலீபன் சிவப்புப் பந்தொன்று வாங்கினான்.
4. கறுப்புப் பூனை சிவப்புப் பந்தை உருட்டி விளையாடியது.

முதலாவது சொல்லியத்தின் எழுவாய் ‘தாமரை’. அதனைச் சிறப்பித்துக் கூறுவதாக ‘வெள்ளை’ என்னும் சொல் வந்துள்ளது. எழுவாய்ச் சொல்லைச் சிறப்பிக்க வருவது எழுவாய் அடைமொழி எனப்படும்.

இரண்டாவது சொல்லியத்தின் பயனிலை ‘வீசியது’. அதன் தன்மையை விளக்குவதாக ‘மெல்லென’ என்னும் சொல் வந்துள்ளது. பயனிலைச் சொல்லைச் சிறப்பிக்க வருவது பயனிலை அடைமொழி எனப்படும்.

மூன்றாவது சொல்லியத்தின் செயப்படுபொருள் ‘பந்து’ என்பதாகும். அதன் தன்மையை விளக்குவதாகச் ‘சிவப்பு’ என்ற சொல் வந்துள்ளது. அது செயப்படுபொருள் அடைமொழி எனப்படும்.

நான்காவது சொல்லியத்தில் சொல்லிய உறுப்புகள் யாவும் அமைந்துள்ளன. ஒரு பொருளின் பண்பையோ, தன்மையையோ சிறப்பித்து அல்லது விளக்கிக்கூறுவது அடைமொழி. ஒரு கருத்தை விரிவாகவும் தெளிவாகவும் புலப்படுத்துவதற்கும் இவ்வடைமொழிகள் உதவுகின்றன.

பாடம் 5

# வீரஞ்செறிந்த வன்னியும் தமிழரசுகளும்

வன்னிப் பெருநிலப்பரப்பின் எல்லைகளாக வடக்கே யாழ்ப்பாண நீரேரியும் தெற்கே அநுராதபுரமும் கிழக்கே திருகோணமலையும் மேற்கே மன்னாரும் இருந்ததென ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூறில் (1890) ஆங்கிலேய அரசின் வன்னிமாவட்ட ஆட்சித்தலைவராக இருந்த யே. பி. லூயிசு (J.P.LOUIS) தான் எழுதிய 'வன்னிக்குறிப்பு' என்னும் நூலிலே குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் தொல்குடியினரான பழந்தமிழ் மக்கள் வாழ்ந்த பகுதிகளில் முதன்மையான பகுதி வன்னியாகும். வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்தே பழந்தமிழ் மக்கள் இப்பகுதிகளில் வாழ்ந்து வந்தமைக்கும் ஆட்சிசெய்து வந்தமைக்கும் பல்வேறு வரலாற்றுச் சான்றுகள் கிடைத்துள்ளன. கண்டி அரசனால் சிறைப்பிடிக்கப்பட்டு சிறையிலிருந்து தப்பியோடிய றொபேட் நொக்சு என்பவர் அநுராதபுரத்தைச் சென்றடைந்த போது அந்நகரம் தமிழர் செறிந்து வாழ்ந்த இடமாகக் காணப்பட்டது என்பதைத் தனது (Manual of Vanni) 'இலங்கையின் வரலாற்று உறவுகள்' என்ற நூலிலே குறிப்பிடுகிறார். இதிலிருந்து 17ம் நூற்றாண்டின் இறுதியிலும் அநுராதபுரம் தமிழருக்குச் சொந்தமாக இருந்தது எனத் தெரிய வருகிறது.

## பெரியபுளியங்குளத்திற் காணப்பட்ட பிராமிக் கல்வெட்டுகள்

வன்னியில் பெரிய புளியங்குளத்தில் முப்பத்தைந்து பிராமிக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில தமிழ்ப்பிராமி எழுத்துகளைக் கொண்டவையாகும். அக்கல்வெட்டுகளிற் சிலவற்றை வாசித்து அறிந்ததிலிருந்து இப்பகுதியில் நிலவிய தமிழ்ச் சிற்றரசுகளின் ஆட்சிச்சிறப்பு, வணிகச்சிறப்பு என்பவற்றை அறிய முடிகிறது.

## தொல்பொருள் ஆய்வுகளின்போது கண்டெடுக்கப்பட்ட ஈமத்தாழிகள், எலும்புக்கூடுகள்

பொன்பரிப்பு, மாதோட்டம், குஞ்சுப்பரந்தன் ஆகிய பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட ஈமத்தாழிகள், எலும்புக்கூடுகள் இலங்கையின் பழங்குடியினர் தமிழர் என்பதற்குச் சான்றுகளாக அமைந்துள்ளன. வன்னியிற் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் திராவிட இனத்துக்கு உரியவை என்பது மாந்தவியலாளரின் முடிவு. இப்பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட ஈமத்தாழிகள் தென்னிந்தியாவிற் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்கால ஈமத்தாழிகளை ஒத்தவையென தொல்லியல் ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளனர்.

## பூநகரிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு ஆய்வுகள்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தொன்பதாம், தொண்ணூறாம் (1989,1990) ஆண்டுகளில் பூநகரிப் பகுதிகளிற் பல தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த ஆய்வுகளின்போது பல நாடுகளுக்குரிய பண்டைய காசுகள், மட்கலங்கள், பிராமி எழுத்துகளுடன் கூடிய மட்கலத்துண்டுகள், கட்டிடஅழிவுகள் போன்ற தொல்லியற் சான்றுகள் கிடைத்துள்ளன. அவற்றுள் கிரேக்க, உரோம, சீன, அரேபியக் காசுகளும் சோழ, பாண்டிய, யாழ்ப்பாண அரசுகளின் காசுகளும் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்குரிய காசுகளும் அடங்கும்.

கதிரமலையில் (கந்தரோடை) மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் அகழ்வாய்வுகளின் முடிவுகள் கந்தரோடை யாழ்ப்பாண அரசின் தொன்மையான தலைநகராக இருந்தமைக்குச் சான்று பகர்கின்றன. பூநகரிப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட அகழ்வுப்பொருட்கள், கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களை ஒத்தவையாகக் காணப்படுகின்றன. எனவே கந்தரோடைக்கு நிகரான தலைநகராக, வணிகநகராக பூநகரி விளங்கியது என்பது புலனாகிறது. பூநகரிப் பகுதியில் காணப்படும் கட்டிட இடிபாடுகளைச் செம்மையாக ஆராயுமிடத்து, வடஇலங்கைத் தமிழரசுகளின் தலைநகராக வன்னியில்

பூநகரி விளங்கியது பற்றியும் அதன் ஆட்சிக்காலம் பற்றியும் தெற்றெனத் தெரிந்து கொள்ள முடியும். இவைதவிர இடைக்கால, பிற்கால தலைநகரங்கள் பல இருந்தமைக்கான பல தடயங்கள் முத்தையன்கட்டு, பனங்காமம் உட்பட வன்னியின் பல்வேறு பகுதிகளில் பரவலாகக் காணப்படுகின்றன.

## வன்னியில் வழங்கப்படும் இடப்பெயர்கள், குளப்பெயர்கள், ஊர்ப்பெயர்கள்

பழந்தமிழர்களான நாகர்களுக்கும் வன்னிமண்ணுக்கும் உள்ள தொடர்புகளுக்குச் சான்றாக வன்னியில் வழங்கப்படும் இடப்பெயர்கள், குளப்பெயர்கள் உள்ளன. இப்பகுதியில் இருக்கும் நாகதேவன்துறை, நாகபொக்கணை போன்ற இடப்பெயர்களும் நாகபடுவான்குளம் போன்ற குளப்பெயர்களும் தகுந்த சான்றுகளாகும். அத்துடன் 'நாக' எனத் தொடங்கும் கோவில்கள், கடவுளர், ஆட்களின் பெயர்களும் நாகர்களுக்கும் வன்னிமண்ணுக்கும் இருந்த தொடர்பை வலியுறுத்துகின்றன. 'நாகதீபம்' என மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் பகுதி வன்னியையும் உள்ளடக்கிய பகுதியென்பது குறிப்பிடத்தக்கது.

தமிழில் நீர்நிலைகளைக் குறிக்கும் சொற்களான குளம், கேணி, வாய்க்கால், கட்டு, ஓடைமறிப்பு, முறிப்பு, மோட்டை, வில், ஆறு, தண்ணி போன்றவற்றைக் கொண்டமைந்த ஊர்ப்பெயர்களை வன்னியில் ஏராளமாகக் காணலாம். வன்னிமண் தமிழ்மக்கள் பரந்தும் செறிந்தும் வாழ்ந்த தொன்மையான மண் என்பதற்கு இப்பெயர்கள் தகுந்த சான்றுகளென யே. பி. லூயிசு தனது வன்னிக்குறிப்பு நூலிலே குறிப்பிட்டுள்ளார்.

## யாழ்ப்பாண அரசும் வன்னியரசும்

பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து யாழ்ப்பாண அரசு வலிமை பெற்றிருந்தது. அக்காலங்களில் அதன் ஆளுமையை ஏற்று, வன்னிச் சிற்றரசுகள் தனியாக இயங்கி வந்தன. யாழ்ப்பாண அரசு வலிமை

குன்றிய காலங்களில் வன்னியரசுகள் தன்னாட்சி உடையனவாக விளங்கின. யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சியின் பின், வன்னியை ஆண்ட மன்னர்களான கயிலைவன்னியனும் பண்டாரவன்னியனும் தமிழருக்குப் பெருமையைத் தேடித் தந்த மன்னர்களாவர். வன்னியின் அரசகுல மகளிரான நல்லநாச்சி, சிதம்பரநாச்சி போன்றோரின் வீரம் பற்றி செவிவழிச் செய்திகளின் ஊடாகவும் பிற்காலத் தமிழிலக்கியங்கள் ஊடாகவும் அறியமுடிகிறது.

மேற்குறிப்பிட்ட சான்றுகள் அனைத்தும் வன்னிமண்ணில் தமிழர்கள்தான் தொல்குடியினர் என்பதை உறுதிப்படுத்துவனவாக உள்ளன. தமக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட போர்களின் போதெல்லாம் வன்னியரசர்களும் வன்னிமக்களும் தமது தளராத உறுதியான எதிர்ப்பினை வெளிப்படுத்தி வந்துள்ளனர். வீரஞ்செறிந்த இவர்களின் போர்வலிமையினாலும் உணர்வினாலும் வன்னிமண் 'அடங்காப்பற்று' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றது.

## அருங்குறிப்புகள்:

- வன்னியின் எல்லைகளாக வடக்கே யாழ்ப்பாண நீரேரியும் தெற்கே அநுராதபுரமும் கிழக்கே திருகோணமலையும் மேற்கே மன்னாரும் இருந்ததாக 1890ல் வன்னி மாவட்ட ஆட்சித் தலைவரான ஆங்கிலேயர் யே. பி. லூயிசு குறிப்பிடுகிறார்.
- வன்னி, பழந்தமிழர் நிலமாக விளங்கியதென்பதற்கு அங்கு கண்டு எடுக்கப்பட்ட கல்வெட்டுகள், எலும்புக்கூடுகள், ஈமத்தாழிகள் போன்றவை சான்றுகளாகும்.
- பூநகரி தமிழரசின் தலைநகராகவும் வணிகநகராகவும் ஆதியில் விளங்கியது என்பது, பூநகரியில் நடைபெற்ற அகழ்வாய்வுகளில் இருந்து தெரியவருகிறது.
- வன்னியில் ஊர்ப்பெயர்கள் குளப்பெயர்கள் போன்றவை, வன்னி தமிழரின் தொன்மையான மண் என்பதைக் காட்டுகின்றன.

- சிதம்பரநாச்சி, நல்லநாச்சி போன்ற வன்னிய அரசகுல மகளிர் மாற்றாருக்கு எதிராகப் படைதிரட்டிப் போராடிய வீரம் பற்றி அறியமுடிகிறது.

## கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. வன்னியின் இடங்கள், குளங்களின் பண்டைய பெயர்கள் காட்டுவது என்ன?
2. இலங்கையின் பழங்குடி மக்களான நாகர், தமிழ் இனத்தைச் சேர்ந்தவர் என்பதற்கான ஆதாரங்கள் எவை?
3. யாழ்ப்பாண அரசின் தொன்மையான தலைநகர் எது?
4. பூநகரிப் பகுதி அகழ்வாய்வில் எந்தெந்த நாட்டுக் காசுகள் காணப்பட்டன?
5. ஈழத்திலே எந்தெந்த இடங்களில் பண்டைய தலைநகரங்கள் கண்டறியப்பட்டுள்ளன?
6. யே. பி. லூயிசு எழுதிய வன்னிக்குறிப்பு நூலின்படி வன்னியின் எல்லைகள் யாவை?
7. வன்னி மக்களின் தனித்தன்மை யாது?

## சொற்பொருள்:

| | | |
|---|---|---|
| தொல்குடியினர் | - | மிகப்பழங்குடியினர் |
| விளத்தம் | - | ஒரு கருத்தை எடுத்துச் சொல்லுதல் |
| பிராமி எழுத்து | - | கல்வெட்டுக்குரிய எழுத்து |
| ஈமத்தாழி | - | சவ அடக்கஞ் செய்யும் மட்பாண்டம் |
| தொல்லியல் | - | பழங்காலம் பற்றிய ஆய்வுக்கலை |
| கேணி | - | ஊர்க்குளம் |

## பழமொழி

அடாது செய்தவர் படாது படுவர்.

*(தீயன செய்தோர் துன்புறுவர்)*

## திருக்குறள்

அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான்க ணுயர்வு.

*(அதிகாரம் 14 - குறள் 135)*

*பொறாமை உடையவனிடம் செல்வங்கள் சேர்வதில்லை. அதுபோல, ஒழுக்கமில்லாதவனிடம் உயர்ச்சி இல்லை.*

## மொழி வளம்

### சொல்லிய வகைகள்

சொல்லியங்களை, அவை வெளிப்படுத்தும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு கூற்று, வினா, ஏவல், மெய்ப்பாடு என நான்கு வகைப்படுத்தலாம்.

எ - கா: 1. கூற்று - என் தாய் மிகுந்த பாடுபட்டு என்னை வளர்த்தார்.

2. வினா - நாளை, நீங்கள் கலை விழாவிற்கு வருவீர்களா?

3. ஏவல் - நீ அங்காடிக்குச் சென்று காய்கறிகளை வாங்கிவா!

4. மெய்ப்பாடு - ஆகா! எவ்வளவு அழகான நீர்வீழ்ச்சி! -

மேலே தரப்பட்டுள்ள நான்கு சொல்லியங்களும் வெவ்வேறு கருத்துகளை உணர்த்துகின்றன.

முதலாவது சொல்லியத்தில் ஒரு செய்தி (கூற்று) எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு செய்தியையோ உண்மைக் கருத்தையோ கூறுவது *கூற்றுச் சொல்லியம்.*

இரண்டாவது சொல்லியம், ஒரு பொருள் பற்றி ஒருவரிடம் வினாவுவதாக அமைந்துள்ளது. இவ்வாறு அமையும் சொல்லியம், *வினாச் சொல்லியம்* எனப்படும்.

மூன்றாவது சொல்லியம், முன்னால் நிற்பவரிடம் செயல் ஒன்றைச் செய்யும்படி ஏவுவதாக அமைந்துள்ளது. இவ்வாறு ஏவுதற்கருத்தை உணர்த்தும் சொல்லியம் *ஏவற்சொல்லியம்.*

நான்காவது சொல்லியம் உணர்ச்சியினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. அவ்வாறு உணர்ச்சியை வெளிப்படுத்தும் சொல்லியம் *மெய்ப்பாட்டுச் சொல்லியம்* எனப்படும்.

சொல்லியங்களைக் கருத்தின் அடிப்படையில் கூற்றுச் சொல்லியம், வினாச்சொல்லியம், ஏவற்சொல்லியம், மெய்ப்பாட்டுச் சொல்லியம் என நான்கு வகைப்படுத்தலாம்.

சொல்லிய வகைகள்



பாடம் 6

# தலையைக் காத்த தமிழ்

தும்பை மலர் எடுத்துச் சரம் தொடுத்துத்
தொங்க விட்ட நீர்வீழ்ச்சித் தாடி!

கம்பஞ் சோறுண்ணும் பழக்கத்தால் கடுகளவும்
கட்டுக் குலையாத நெடுநல் மேனி!

அம்பின் முனையும் தோற்றுவிடும்படியாக
அழகான கூர் விழிகள்!

அதோ வருகிறார், அமுதத் தமிழ்மொழியே
அரும்புலவர் உருவெடுத்து வருவது போல்!

மோசிகீரனார் என்பது அவர் பெயர் அவருடல் தழுவி
வீசுகிற தென்றல் கூடத் தமிழாய் மணக்கும்.

மூவேந்தராம் சேர சோழ பாண்டியர்க்கு - இந்தப்
பாவேந்தர் மீது தனி மதிப்பே உண்டென்பர்!

முதுகவிஞர் மோசிகீரனார் மலர்க்குடத்தில்
மதுவருந்த வருகிற வண்டே போல்
மதிமன்னன் சேரமானைச் சந்திக்க
அதி தொலைவு நடந்து வந்து,
அரசனது மாளிகையை அடைந்து விட்டார்.

அயர்வுடனே மன்னன் உறங்குவது கேள்வியுற்று
அவனைக் காண அரண்மனையில் காத்திருந்தார்.

அவருக்கும் ஓய்வு கொள்ள வேண்டுமென்றோர் உணர்வு;
அதனாலே சுற்றுமுற்றும் பார்க்கலானார்.
ஆங்கோர் இடம் படுப்பதற்குக் கிடைக்குமா என்று!

வீர முரசம் வைக்கிற கட்டிலொன்று
வெண்மலர்கள் நிறைந்தவாறு இருக்கக் கண்டார்!
குருதி வழியும் போர் முகத்தில்
கொட்டுகிற முரசு வைக்கும்
கட்டிலென்று அறியாத புலவர் ஏறு
கண்ணுறங்க வசதியெனப் படுத்துக்கொண்டார்!

வெற்றிகொள் முரசு வீற்றிருக்கும் கட்டில்மீது
வேறெவரும் படுப்பதெனில் பெருங்குற்றமென
வேந்தர்கள் வெகுண்டெழுந்து தலைதனையே
வெட்டி வீழ்த்தும் காலம் அது!

நீராட்டி எடுத்து வர வீரர் சிலர் - அந்தப்
போராட்டக் கள முரசை அகற்றியதால்
விபரம் தெரியா வித்தகப்புலவர் - அதில்
விழிகளை மூடி உறங்கலுற்றார்!

வெகு தொலைவு நடந்த களைப்பில்
வியர்வை முத்து உடலில் விளைய
மிகு உறக்கம் கொண்டு விட்டார்.
மெய் மறந்து குறட்டை விட்டார்!

துயில் களைந்து எழுந்து
மாளிகையின் முன்புறத்தில் உலவுதற்கு
மாமன்னன் வந்தபோது வியப்புற்று

முரசு கட்டிலருகே விரைந்தான் - ஆங்கு
மோசிகீரனார் உறங்குதல் கண்டான்!

"வாள் எடுத்து வந்திடவோ அரசே?" யென்று
ஆள் ஒருவன் வணங்கி நின்றான்...

போர் முரசம் வைக்கிற கட்டில் மீது
யார் ஒருவர் படுத்தாலும் அவரைத்
துண்டித்து உயிர் பறித்தல் - ஒரு
கண்டிப்பு ஆணையென இருப்பதாலே
மண்டியிட்ட வீரன், மன்னனது கண்ணசைவை
மரியாதையுடனே எதிர்நோக்கிக் கொண்டிருந்தான்!

அரசனின் விழிகள் நெருப்பைப் பொழியும்;
அவனது மொழியில் ஆத்திரம் வழியும்;
என்றந்த வீரன் நினைத்ததற்கு மாறாக
"எடுத்துவா விசிறியை!" என்றான் வேந்தன்!

காவலனோடிக் கொண்டுவந்த கவரியினைக்
கைகளில் ஏந்திக் கவிஞர் மீது
கனிவுடன் வீசிப் பணிவிடை புரிந்தான்.
நனிமிகு புகழுடன் நாடாண்ட வேந்தன்!

களைப்பு நீங்கிப் புலவர் எழுகிற வரையில்
கவரி வீசுதலை மன்னன் நிறுத்திடவில்லை...
நெடுநேரம் கழிந்தபின்னர் எழுந்த புலவர்,
திடுமெனக் குதித்தார் கட்டிலில் இருந்து!

“மன்னவனே என்ன இது?” எனத் துடித்தார்! - “இந்தச்

சின்னவன் பெற்ற பேறு” என்றான் சேரன்!

“அரசு ஆணையை அறிவேன் எனினும்

முரசு கட்டிலென அறியாது படுத்தேன்.

ஆவி போக்கிடும் தண்டனையிருந்தும் - எனைக்

கூவியெழுப்பிக் கொல்லுதல் விடுத்து

கொற்றவனே தன் கையால் எனக்குக்

குளிர் சாமரம் வீசுகிற காட்சி என்னே?”

என்றயர்ந்தார் புலவர்!

“தமிழுக்குத் தொண்டு செய்தால் - அந்தத்

தமிழ் உள்ளளவும் வாழ்வோம் என்ற

தன்னலத்தால்; தமிழேவடிவாக

என்னகத்தே வந்துள்ள தங்களுக்கு

நான் செய்த தொண்டு இஃதே” என்றான் சேரன்!

- சங்கத் தமிழ் நூலிலிருந்து



## பொழிப்பு:

தும்பையின் வெண்மலர்களைச் சரமாகத் தொடுத்து, தொங்கவிட்டது போலவும் நீர்வீழ்ச்சி போலவும் தொங்குகிற நீண்ட வெண்தாடி.

கம்பம் சோறு உண்ணும் பழக்கத்தால் உரமேறிய கடுகளவும் உடற்கட்டுக் குலையாத உடல்.

அம்பின் கூர்நுனி தோற்றுப் போகும்படியான அழகிய அறிவுக்கூர்மையான விழிகள். (கண்ணோட்டம் உடைய விழிகள்)

இக்கோலத்துடன் அதோ வருகிறார்! அமிழ்தினை ஒத்த தமிழே அரிய பெரும்புலவர் வடிவில் வருவதுபோல். (அவரே தமிழ்! தமிழே அவர்! அதாவது, ஈடிணையற்ற தமிழ்ப்புலமை உடையவர்)

மோசிகீரன் என்பது அவருடைய பெயர். அப்புலவரின் உடலைத் தழுவி வருகிற தென்றலில் கூடத் தமிழ் மணக்கும்.

மூவேந்தரான சேரசோழபாண்டியருக்குப் பாவேந்தரான மோசிகீரன் மீது தனி மதிப்புண்டு என்று சொல்வர்.

புலமையாலும் வயதாலும் முதிர்ந்த மோசிகீரனார், தேன்குடத்தில் தேனுண்ண வருகிற வண்டைப்போல பேராவலுடன் அறிவுமிக்க மன்னனான சேரமன்னனைக் காண்பதற்கு வெகுதொலை நடந்து வந்து, அரண்மனையை அடைந்துவிட்டார்.

மன்னன் உறங்குவதைக் கேள்விப்பட்டு, அவன் எழுந்தபின் கண்டுசெல்ல அரண்மனையிலேயே களைப்புடன் காத்திருந்தார்.

அவருக்கு ஓய்வாகப் படுக்கவேண்டும் போல் தோன்றியதால், அக்கம்பக்கத்தில் படுப்பதற்கு இடம் கிடைக்குமா என்று பார்த்தார்.

போர்முரசம் வைக்கிற கட்டில் வெண்மலர்கள் பரப்பியபடி இருப்பதைக் கண்டார். குருதி வழிகிற போர்க்களத்திலே முழங்கும் போர்முரசு வைக்கும் கட்டிலென்று அறியாத, புலவருள் உயர்ந்தோரான மோசிகீரனார் உறங்குவதற்கு நன்றாயிருக்குமென அக்கட்டிலிலே படுத்தார்.

போர்க்களத்திலே முழங்குகிற வெற்றி முரசைப் பெருமையுடன் வைப்பதற்கென உள்ள கட்டிலிலே எவரேனும் படுத்தால், அது பெருங்குற்றம் என்று வேந்தர் சினந்தெழுந்து படுத்தவனின் தலையை வெட்டியெறிகிற காலம் அந்தக் காலம்.

அக்கட்டிலிலே இருந்த போர்முரசை வீரர் சிலர் கழுவி வருவதற்காகக் கட்டிலை விட்டு அகற்றியது தெரியாத பெரும் புலவரான மோசிகீரனார், அக்கட்டிலிலே கண்களை மூடி உறங்கினார்.

நீண்டதொலைவு நடந்த களைப்பினால் வியர்வைத் துளிகள் உடலில் வழிய, ஆழ்துயில் கொண்டு உணர்வின்றிக் குறட்டைவிட்டு உறங்கினார்.

துயில் கலைந்து எழுந்த மன்னன் சிறிது நேரம் அரண்மனையின் முன்புறத்தில் காலாற நடப்பதற்கு வந்தபோது, முரசு கட்டிலில் ஒருவர் படுத்திருப்பதைக் கண்டு வியப்புற்று கட்டிலருகே விரைந்து சென்றான். கட்டிலில் மோசிகீரனார் படுத்து உறங்குவதைக் கண்டான்.

வாள் எடுத்து வந்திடவோ? (தலையை வெட்ட) என்று வீரன் ஒருவன் வந்து வணங்கி நின்றான்.

முரசுகட்டிலில் படுத்தால் எவராயிருந்தாலும் அவரை வெட்டிக் கொல்லுதல் வேண்டும் என்றொரு கடுமையான கட்டளை இருப்பதால், வாள் எடுத்து வரவோ? என்று கேட்டுப் பணிந்து நின்ற வீரன், மன்னனது கண்ணின் கட்டளைக்குக் காத்து, அவனது கண்ணையே பார்த்து நின்றான்.

அரசனின் விழிகள் சினத்தீ பொழியும் அவனது சொற்களில் சினம் வழியும் என்று அவ்வீரன் நினைத்ததற்கு மாறாக, எடுத்து வா விசிறியை என்று ஆணையிட்டான் வேந்தன்.

காவலன் விரைந்து போய்க் கொண்டு வந்த விசிறியைக் கையில் பிடித்து, புலவர்மீது வீசி அன்போடு பணிவிடை செய்தான், எல்லையற்ற புகழுடன் சேரநாட்டை ஆளுகிற மன்னன்.

உறங்கியதால் களைப்பு நீங்கிப் புலவர் எழும்வரை விசிறி வீசுவதை மன்னன் நிறுத்தவே இல்லை. நீண்டநேரம் கழிந்து துயிலெழுந்த புலவர், மன்னன் விசிறி வீசுவதைக் கண்டு திடுக்கிட்டுக் கட்டிலில் இருந்து குதித்தார். மன்னா! என்ன இது? ஒரு புலவனுக்கு மன்னன் விசிறி வீசுவதா? என்று துடித்தார். அதற்கு இந்தச் சிறியவன் பெற்ற பேறு என்றான் மன்னன். தமிழால் உயர்ந்த புலவனை விட அதிகாரத்தால் உயர்ந்த மன்னன் சிறியவன்.

முரசுகட்டிலில் படுப்பது கொலை ஒறுப்புக்குரிய குற்றமென நான் அறிவேன். எனினும், இது முரசுகட்டிலெனத் தெரியாது படுத்துவிட்டேன். உயிர் பறிக்கும் ஒறுப்பு இருந்தும் என்னை அதட்டி எழுப்பிக் கொல்லுவதை விட்டுவிட்டு, மன்னனே தன் கையால் எனக்கு விசிறி வீசுகிற காட்சி என்னே வியப்பு! எனத் திணறினார் புலவர்.

தமிழுக்குத் தொண்டு செய்தால் தமிழ் உள்ளவரை நானும் வாழ்வேன் என்கிற தன்னலத்தால் தான், தமிழே வடிவாக என் அரண்மனைக்கு வந்த தங்களுக்கு நான் இந்தப் பணிவிடையைச் செய்தேன் என்றான் சேரமன்னன்.

## கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. ‘தும்பைமலர் நீர்வீழ்ச்சித் தாடி, கட்டான நெடுநல்மேனி’ யார் இந்த உருவம்?
2. போர்க்களத்தில் கொட்டும் முரசின் பெயர் என்ன?
3 போர்முரசக் கட்டில் மீது புலவரன்றி வேறொருவர் படுத்திருந்தால் அவருக்கு என்ன ஒறுப்புக் கிடைத்திருக்கும்?
4. “மன்னவனே என்ன இது?” என மோசிகீரனார் துடித்தது ஏன்?
5. ஏழைப் புலவனுக்கு நாடாளும் மன்னன் கவரி வீசியது ஏன்?
6. தமிழ் உள்ளளவும் வாழ, என்ன செய்ய வேண்டுமெனச் சேரன் கூறுகிறான்?
7. இக்கதையை நீர் விளங்கியபடி ஐம்பது சொற்களுக்குள் எழுதுக.

## சொற்பொருள்:

| | | |
|---|---|---|
| தும்பை | - | பால்போன்ற வெள்ளை மலர்கள் மலரும் ஒரு பூண்டு |
| சரம் | - | தொடுத்துக் கட்டிய பூமாலை |
| கம்பு | - | சோளம் போன்ற ஒருவகைத் தவசம் |
| நெடுநல் மேனி | - | நீண்டுயர்ந்த உடம்பு |
| முது | - | அறிவாலும் வயதாலும் முதிர்ந்த |
| மதி | - | அறிவு |
| போர்முகம் | - | போர்க்களம் |
| வெகுண்டு | - | அடங்காத சினங்கொண்டு |
| ஆழ்துயில் | - | ஆழ்ந்த உறக்கம் |
| கவரி | - | மயிரில் செய்த விசிறி |

நனிமிகு - மிகவுயர்ந்த

பேறு - கிடைத்தற்கரிய பொருள் கிடைப்பது

ஆவி - உயிர்

சாமரம் - விசிறி

ஒறுப்பு - தண்டனை

## பழமொழி

இரக்கப் போனாலும் சிறக்கப் போ!

(வறுமையிலும் செம்மையாய் இரு)

## நல்வழி

வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்தில்
பட்டுருவும் கோல்பஞ்சில் பாயாதாம் - நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்.

- ஔவையார்

ஆண் யானையில் (வேழம்) குத்தித் துளைத்துச் செல்லும் ஈட்டி பஞ்சுப் பொதியில் ஏறாது. நீண்ட இரும்புக் கடப்பாரைக்குப் பிளக்காத பாறை, தழைக்கும் மரத்தின் வேர் நுழைய வெடிக்கும். (சுடுசொல் வெற்றிபெறாது. இன்சொல்லே வெற்றி தரும்)

வெட்டனவை - கடும் போக்கு

மெத்தனவை - வளைந்து கொடுக்கும் தன்மை

## மொழி வளம்

### அடுக்குத் தொடர்

அப்பா தேநீரைச் சுடச்சுடக் குடித்தார்.

வழிபாட்டு முறைகள் வழிவழியாய் வந்தவை.

மலர்கள் கொத்துக்கொத்தாய் மலர்ந்திருந்தன.

இவற்றுள் சுடச்சுட, வழிவழி, கொத்துக்கொத்து என்பவை அடுக்குத் தொடர்கள் ஆகும். ஓர் அடுக்குத்தொடரில் ஒருசொல் இருமுறை இடம் பெறுவதைக் காணலாம். அவை தனித்தனி நின்றும் பொருள் தரக்கூடியன. எனினும், இருமுறை அமைந்த ஒரு தொடராக இயங்கும்போது தரும் பொருட்சிறப்பைத் தனித்தனியே நின்று தரமாட்டாது.

தரப்பட்ட சொல்லியங்கள் அவ்வுண்மையைப் புலப்படுத்தின. ஆகவே, அடுக்குத்தொடர் பொருட்செறிவை மிகுவிக்கும் சொற்றொடர் எனக்கொள்ளலாம். எடுத்துக்காட்டாகச் சில அடுக்குத் தொடர்கள் தரப்பட்டுள்ளன.

எ-கா:

| | | |
|---|---|---|
| மெல்லமெல்ல | ஏறிஏறி | புதுப்புது |
| சின்னச்சின்ன | மணிமணி | கூட்டங்கூட்டம் |
| கற்றைகற்றை | பாளம்பாளம் | மின்னிமின்னி |
| ஊர்ஊர் | நேர்நேர் | வண்ணவண்ண |

பாடம் 7

# இலக்கிய இன்பம்

அது ஓர் அழகான ஆற்றங்கரை. அந்த ஆற்றின் கரையில் தென்றலின் இதத்தில் நடைபோடுகிறார் ஒரு புலவர். மெல்லச் சிந்துகின்றன மழைத்துளிகள். இளவேனில் மழைத்துளிகள் உடலுக்குப் புத்துணர்வை அளிக்கின்றன. மெல்ல நிமிர்ந்து பார்க்கிறார். கறுத்துத் திரண்டு வரும் நீர்சுமந்த முகில்கள் மரங்களின் மீது படிந்து வருகின்றன. நீரைக் கிழித்து எதிர் ஏறும் மீன்களும் அயலாடும் மயில்களும் மகிழ்வில் திளைக்கின்றன.

புரண்டடித்துப் பாய்கிற ஆற்றை எதிர்த்து ஏறி வந்த வாளைமீன் ஒன்று, பேரலை ஒன்றை எதிர்த்து எகிறிப் பாய்கிறது; அந்தத் திமிறற் பாய்ச்சலினால் ஆற்றங்கரையில் வேலிபோல் நின்றிருந்த கமுகு மரத்திலேறுகிறது; பின் அங்கிருந்து துள்ளி மழைமுகிலை ஊடுருவிக் கிழிக்கிறது. அதனால் முகில் கிழிந்து மழை சோவெனப் பொழிகிறது. அந்த மழையோடு வாளைமீன் கீழே இறங்குகிறது.

வெள்ளத் தடங்காச் சினைவாளை
வேலிக் கமுகின் மீதேறித்
துள்ளி முகிலைக் கிழித்துமழைத்
துளியோடிறங்கும்

இக்காட்சியைக் கண்டு புலவர் தன்னுள் மகிழ்ந்தவாறு நகர்கிறார். மெல்லென மழைமுகில் விலகி, வானம் வெளுத்து வருகிறது. அப்படியே ஆற்றோர வாய்க்காலிலே இறங்கி நடக்கிறார்.

உழவர் ஏர்பூட்டி, நீர் தேக்கிய வயல்களை உழுது சேறாக்குகின்றனர். மண்ணிடையே புதையுண்டு கிடந்த சங்குகள் மேலே மிதக்கின்றன. வயலோரத்து மேடுகளில் தென்னந்தோப்புகளும் பலாக்காடுகளும் நிறைந்து காணப்படுகின்றன. பலாக்களில் குரங்குகள் பலாக்கனிகளைப் பறிப்பதைக் கண்ட உழவர்கள், வயலில் மிதந்த சங்குகளை எடுத்து குரங்குகளை விரட்ட எறிந்தனர். சினம் கொண்ட குரங்குகள், சங்குகள்

எறிந்த உழவரை நோக்கி இளநீர்களைப் பிடுங்கி எறிகின்றன.

புலவர் உள்ளத்தில் இக்காட்சி தொடுகிறது; புளகாங்கிதம் பிறக்கிறது; பாடுகிறார்.

பங்கப் பழனத் துழுமுழவர்
பலாவின் கனியைப் பறித்ததென்று
சங்கிட் டெறியக் குரங்கிளநீர்
தனைக்கொண் டெறியும்

புலவர் தன்னை மறந்து இயற்கையின் திருவிளையாடலில் ஆழ்ந்தபடி நடக்கிறார். வயலோரக்குளம் ஒன்றில் ஆம்பலும் அல்லியும் தாமரையும் மலர்ந்து நிறைந்து மூடிக்கிடக்கின்றன. அதனிடையே நீரில் அமிழ்ந்து கிடக்கின்றன எருமைகள். பால் நிறைந்த மடிகளையுடைய அந்த எருமைகளிடத்து உகளும் சுறாக்கள்.



சுறாக்களைச் சினந்து எருமைகள் கொம்பினால் சாடும். திடுக்குற்ற சுறாக்கள் உழன்று சீறிப் பாய்கின்றன. அருகிலே வயலுக்கு வேலியிடப்பட்டுள்ளது. அது இஞ்சி வேலி; இஞ்சியூடே மஞ்சளும் விளைந்துள்ளது. வரப்பிலே வேரிற் பழுத்த பலாப்பழம். பாய்ந்த சுறாக்கள் வரம்பிற் பழுத்திருக்கும் பலாக்கனிகளைக் கீறிப்பிளந்து, இஞ்சிவேலியில் இடறி மஞ்சளுள் வீழ்கின்றன.

துஞ்சு மேதி சுறாக்களைச் சீறச்
சுறாக்க ளோடிப் பலாக்கனி கீறி
இஞ்சி வேலியின் மஞ்சளிற் போய்விழும்...

என்ற பாடலை நினைத்தவாறு, புலவர் வயலோர வரப்பில் தொடர்ந்து நடை பயில்கிறார். அந்திமாலைக்கு அணியமாகும் சூழல்; புள்ளினங்களின் ஆரவாரம்; அடிவானம் செம்மைக்களை கட்டும் வேளை;

களத்து மேட்டிலே பூத்திருந்த சூரியகாந்திப்பூ மகரந்தம் என்னும் மஞ்சட் பொடியை முகமெங்கும் பூசியபடி கதிரவனை நோக்கியவாறு தவம் கிடக்கிறது. இது என்ன கதிரவன் பிரிவைத் தாங்கமுடியாமல் துயருறுகிறதா? அப்படியானால், கதிரவனின் அன்புக்குரியவளான தாமரைமலர் இந்தக் காட்சியைக் கண்டால் என்ன செய்வாள்! தனக்குள் சிரிக்கிறார்; பாடுகிறார்.

மஞ்சட் குளித்து முகமினுக்கி நல்ல
மாயப் பொடிபூசி நிற்குநிலை
கஞ்ச மகள்வந்து காணிற் சிரிக்குமோ
கண்ணீ ருகுக்குமோ ஆரறிவார்

பாடியவாறே புலவர் கட்புலனில் மறைகிறார். உளங்கவரும் காட்சிகளை மொழியில் அமைப்பது இலக்கியம். தமிழ் மொழியில் புலவோர் இயற்கைக் காட்சிகளை இலக்கியமாக்கி இன்புறத் தந்துள்ளனர். இத்தகைய இலக்கியங்கள் செம்மொழியாகிய தமிழில் நிறைந்து உள்ளன.

## கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. வாளைமீன் முகிலைக் கிழித்த அழகை எழுதுக.
2. வயலோரத்து மேடுகளில் எவை நிறைந்து காணப்படுகின்றன?
3. உழவர்கள் உழும்போது சேற்றிலிருந்து எவை மேலே மிதக்கின்றன?
4. குரங்குகள் இளநீர்களைப் பறித்து எறிகின்றன ஏன்?
5. வயலுக்கு வேலியாக இருப்பவை எவை?
6. சுறாக்கள் எவ்வாறு பாய்ந்தன?
7. சூரியகாந்தி ஏன் மஞ்சள் மாயப்பொடி பூசி நிற்கிறது?

## சொற்பொருள்:

| | | |
|---|---|---|
| பங்கம் | - | சேறு |
| பழனம் | - | வயல் |
| துஞ்சு | - | உறங்கு |
| மேதி | - | பெண் எருமை |
| கஞ்சமகள் | - | தாமரைப்பூ |
| உகுக்கும் | - | சொரியும், பொழியும் |
| திளைக்கின்றன | - | இன்பத்தில் மூழ்குகின்றன |
| திமிறல் | - | மீறுதல் |
| எகிறல் | - | எற்றி, துள்ளி |
| புளகாங்கிதம் | - | நிறைந்த உளமகிழ்வு |
| உகளும் | - | முட்டிமோதி அலைத்தல் |
| அணியம் | - | தொடங்கலுக்கு ஏற்ற நிலை |
| செம்மைக்களை | - | செவ்வழகு |
| கட்புலன் | - | காட்சி |

## பழமொழி

சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்.

*(அற்ப பொருளையும் இகழாது பேணுதல் வேண்டும்)*

## திருக்குறள்

அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்.

*(அதிகாரம் 43 - குறள் 430)*

*அறிவுச்செல்வம் உடையவர்கள் எல்லாச் செல்வங்களும் உடையவர் போலாவர். கல்வி அறிவு அற்றவர்கள் மற்றச் செல்வங்கள் உடையவராயிருப்பினும் ஒன்றுமில்லாதவரே.*

# மொழி வளம்

## தனிச்சொல்லியம், தொடர்ச்சொல்லியம்

சொல்லியங்களை அமைப்பு அடிப்படையிலே தனிச்சொல்லியம், தொடர்ச்சொல்லியம் என வகைப்படுத்தலாம். அதாவது தனிச்சொல்லியம் அல்லாத எல்லாவகையான சொல்லியங்களையும் தொடர்ச்சொல்லியம் என்ற வகைக்குள் அடக்கிவிடலாம்.

### தனிச்சொல்லியம்

ஓர் எழுவாய் ஒரு பயனிலையைப் பெற்று வருவது தனிச்சொல்லியம் எனப்படும். இது முற்றுப்பெற்ற ஒரு செயலை மட்டும் கூறும்.

எ-கா: இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை எழுதினார்.

இது ஓர் எழுவாயையும் ஒரு பயனிலையையும் பெற்று வந்துள்ளது.

### தொடர்ச்சொல்லியம்

எ-கா: புதிய சட்டையில் மண்படவே அல்லி சினங்கொண்டு, அடிப்பதற்குச் சங்கவியைத் துரத்தினாள்.

இங்கு ஒன்றுக்குமேற்பட்ட செயல்கள் கூட்டாகக் கூறப்படுகின்றன.

செயல்கள்: மண்படுதல், சினங்கொள்ளல், துரத்துதல்

அல்லியின் முதலாவது செயல் ‘சினங்கொண்டு’ எனக் குறைவினையாக நிற்கிறது. இரண்டாவது செயல் ‘துரத்தினாள்’ என வினைமுற்றாக நிற்கிறது. இவ்வாறு ஒரு சொல்லியத்தில் ஓர் எழுவாயின் ஒன்றுக்கு மேற்பட்ட செயல்களில் ஒரு செயல்

மட்டும் முற்றுப்பயனிலை கொண்டு முடியும் சொல்லியம் தொடர்ச்சொல்லியம் எனப்படும்.

தனிச்சொல்லியங்களைப் பொருத்தமான முறையில் இணைத்து ஒரு முற்றுவினை கொண்ட தொடர்ச்சொல்லியம் ஆக்கலாம்.

## வினைமுற்றை வினையெச்சமாக மாற்றுதல்

எ - கா: 1. வேலன் காய்கறிகளை விற்றான்.
2. வேலன் பணம் பெற்றான்.

வேலன் காய்கறிகளை விற்றுப் பணம் பெற்றான்.

## வினைமுற்றைப் பெயரெச்சமாக மாற்றுதல்

எ - கா: 1. நவாலியில் சோமசுந்தரப்புலவர் வாழ்ந்தார்.
2. அவர் சிறுவருக்காகப் பல பாடல்கள் எழுதினார்.

நவாலியில் வாழ்ந்த சோமசுந்தரப்புலவர், சிறுவருக்காகப் பல பாடல்கள் எழுதினார்.

பாடம் 8

# கத்தரித் தோட்டத்துக் காவலன்

## (கத்தரி வெருளி)

கத்தரித் தோட்டத்து மத்தியிலே நின்று
காவல் புரிகிற காவலா - நின்று
காவல் புரிகிற காவலா!
மெத்தக் கவனமாய்க் கூலியும் வாங்காமல்
வேலை புரிபவன் வேறுயார்- உன்னைப்போல்
வேலை புரிபவன் வேறுயார்?

கண்ணு மிமையாமல் நித்திரை கொள்ளாமல்
காவல் புரிகிற காவலா - என்றும்
காவல் புரிகிற காவலா!
எண்ணில் உன்னைப்போல் இரவு பகலாக
ஏவல் புரிபவன் வேறுயார் - என்றும்
ஏவல் புரிபவன் வேறுயார்?



வட்டமான பெரும் பூசினிக் காய்போல
மஞ்சள் நிறத்தலைப் பாகையைப்பார்
மஞ்சள் நிறத்தலைப் பாகையைப்பார்!
கட்டி யிறுக்கிய சட்டையைப் பாரங்கே
கைகளில் அம்பொடு வில்லைப் பார் - இரு
கைகளில் அம்பொடு வில்லைப் பார்!

தொட்டு முறுக்காத மீசையைப்பார் கறைச்
சிப்பிபோலே பெரும் பல்லைப்பார் - கறைச்
சிப்பிபோலே பெரும் பல்லைப்பார்!
கட்டிய கச்சையில் விட்டுச் செருகிய
கட்டை உடைவாளின் அழகு பார் - ஆகா
கட்டை உடைவாளின் அழகு பார்!
பூட்டிய வில்லுங் குறிவைத்த அம்பும்
பொல்லாத பார்வையுங் கண்டதோ - உன்றன்
பொல்லாத பார்வையுங் கண்டதோ!
வாட்ட மில்லாப்பயிர் மேயவந்த ஆன்
வாலைக் கிளப்பிக்கொண்டோடுமே - வெடி
வாலைக் கிளப்பிக்கொண்டோடுமே.

கள்ளக் குணமுள்ள காக்கை உன்னைக் கண்டு
கத்திக் கத்திக் கரைந்தோடுமே - கூடிக்
கத்திக் கத்திக் கரைந்தோடுமே!
நள்ளிரவில் வருங் கள்வனுனைக் கண்டு
நடுநடுங்கி மனம் வாடுமே - ஏங்கி
நடுநடுங்கி மனம் வாடுமே.

- நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

## கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. கண் இமைக்காமல் நித்திரை கொள்ளாமல் காவல் புரிபவன் யார்?
2. பயிரை மேயவந்த ஆன் ஓடுகிறது ஏன்?
3. பூசினிக்காய் போலுள்ளது எது?
4. கத்தரித் தோட்டத்துக் காவலன் எப்படி வேலை செய்கிறான்?
5. அவன் தனது கைகளில் எவற்றை வைத்திருக்கிறான்?
6. கத்தரித் தோட்டத்துக் காவலனின் பார்வை எப்படிப்பட்டது?
7. காக்கை ஏன் கத்திக் கரைந்தோடுகிறது?

## பழமொழி :

பானையில் இருந்தால் தானே அகப்பையில் வரும்.

*(இருக்கிற அளவிற்குள் தான் அறிவு வெளிப்படும்)*

## நன்னெறி :

இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே - பொன்செய்
அதிர்வளையாய்! பொங்காது அழல்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல்.

-சிவப்பிரகாச அடிகள்

பெருங்கடலை (இருநீர்) உடைய விந்தைமிகு உலகம், இனிய சொல்லால் அன்றி கடுஞ்சொற்களால் என்றும் மகிழ்வடையாது. பொன்னால் செய்த ஒலிக்கும் வளையலை அணிந்துள்ளவளே! கதிரவனின் வெப்பக் கதிர் ஒளியால் கடல் பொங்காது. குளிர்மையுடைய மதியின் நிலாக்கதிர் வரக் கடல் பொங்கும்.

# இலக்கணம்

## எதிர்ப்பொருட் சொற்கள்

| | | |
|---|---|---|
| அகம் | - | புறம் |
| மெய்ம்மை | - | பொய்ம்மை |
| காலை | - | மாலை |
| இறப்பு | - | பிறப்பு |
| இழு | - | தள்ளு |
| ஈட்டல் | - | இழத்தல் |
| உறக்கம் | - | விழிப்பு |
| குறைவு | - | நிறைவு |
| கலக்கம் | - | தெளிவு |
| காய்தல் | - | உவத்தல் |

## எதிர்ப்பாற் சொற்கள்

| | | |
|---|---|---|
| அரசன் | - | அரசி |
| அழகன் | - | அழகி |
| இடையன் | - | இடைச்சி |
| கிழவன் | - | கிழவி |
| உழவன் | - | உழத்தி |
| செல்வன் | - | செல்வி |
| தலைவன் | - | தலைவி |
| தந்தை | - | தாய் |
| திருடன் | - | திருடி |
| இறைவன் | - | இறைவி |
| புலவன் | - | புலத்தி |
| ஆயர் | - | ஆய்ச்சியர் |

பாடம் 9

# விபுலாநந்த அடிகள்

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழீழம் தோற்றுவித்த சான்றோருள் ஈடிணையற்ற பேரறிஞராக விளங்கியவர் விபுலாநந்த அடிகள். அவர் ஈழத்தவர் ஆயினும், தமிழுலகம் கண்ட பேரறிஞர் என்ற பெருமையோடு திகழ்ந்தவர்; உலகம் போற்றும் முத்தமிழ் வித்தகராகவும் புகழ் பெற்றவர்; பகுத்தறிவுப் போராளியாக ஏழை எளிய மக்களின் ஏற்றத்திற்கும் அயராது உழைத்தவர். அவரது ஆய்வுகளும் பணிகளும் பற்பல படிகளில் அவரை ஏற்றின; காலத்தால் அழியாத சிறந்த படைப்புகளையும் தந்தன.

ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றிரண்டாம் ஆண்டு மார்ச் மாதம் இருபத்தொன்பதாம் நாள் (29.03.1892) மட்டக்களப்பிலுள்ள காரைதீவிலே விபுலாநந்தர் பிறந்தார். அவரது தாயார் கண்ணம்மா; தந்தையார் சாமித்தம்பி. அவருடைய இயற்பெயர் மயில்வாகனன். மிக இளமையிலேயே தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேறினார்.



அவர் உயர்கல்வி கற்று, ஆசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர் கொழும்பில் ஆசிரியப் பயிற்சி பெற்று, பயிற்றப்பட்ட ஆசிரியரானார். அவர் தமது 25ஆவது அகவையில் அறிவியல் ஆசிரியராகப் பணிபுரியும் பொழுது இலண்டன் பல்கலைக்கழக அறிவியற் பட்டமும் பெற்றார். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபதாம் (1920) ஆண்டில் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் முதல்வராகி அளப்பரிய தொண்டாற்றினார்.

இளமையிலேயே அவரது உள்ளம் துறவை நாடியதால், தனது முப்பத்திரண்டாவது அகவையில் துறவறம் மேற்கொண்டார். அன்று முதல் அவரது பெயர் விபுலாநந்த அடிகள் ஆயிற்று. துறவறத்தின் பயனாக இறைநெறித் தத்துவங்களைக் கற்றார். இறைநெறியையும் தமிழ்மொழியையும் வளர்க்கப் பள்ளிகளை அமைத்தார். ஏழை, ஏதிலி மாணவர் ஏற்றம் பெறுவதற்கு அவரது பள்ளிகளில் தளம் அமைக்கப்பட்டது. அம்மாணவருக்குக் கொடையாகத் தங்ககங்களும் உணவும் வழங்கிக் கல்வி கற்பித்தார்.

இறைநெறி, மொழி, தமிழிசை, கீழைத்தேய மேலைத்தேய நாடகங்கள், பழந்தமிழ் நூல்கள் முதலியவற்றை அவர் துருவித்துருவி ஆராய்ந்தார். அவ்வாய்வுகளின் பயனாக ஆங்கிலவாணி, மதங்கசூளாமணி, யாழ்நூல் முதலிய நூல்கள் அவரால் எழுதப்பட்டன. அடிகளார் தமிழுக்குச் செய்த தொண்டுகள் யாவற்றிலும் சாலச் சிறந்ததும் காலத்தால் அழியாததும் அவர் எழுதிய யாழ்நூலே ஆகும். இந்த யாழ்நூலை ஆக்கிட அடிகளாரது ஆழ்ந்தகன்ற தமிழறிவும் பரந்துபட்ட பன்மொழி அறிவும் முறையான இசையறிவும் உதவியாய் அமைந்தன. இவர் ஆயிரம் நரம்பு யாழின் கணக்கினைக் கண்டறிந்து, அதனை மீண்டும் அமைப்பதற்கு வேண்டிய குறிப்புகளையும் யாழ்நூலில் எழுதியுள்ளார். இந்நூல் தமிழுக்குக் கிடைத்த அரும்பெருஞ் செல்வமாகும்.

அடிகளாரின் கல்வித்திறனும் அறிவுத் தெளிவும் துறவின் பெருமையும் யாழ்நூலுமே அவரது புகழுக்குக் கரணியம் எனக் கண்டோம்.

அவற்றுக்கு இணையாக அவர் புரிந்த ஆசிரியப் பணியும் சமூகப் பணியும் குறிப்பிடத்தக்கவை. தம் பேரறிவால் தமிழ்நாட்டிலுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதலாவது தமிழ்ப் பேராசிரியர் என்ற சிறப்பினைப் பெற்றார். அவர் தம் இறுதி மூச்சு வரையும் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராய் அளப்பரிய பணியாற்றினார். காரைதீவிலுள்ள சாரதா வித்தியாலயம், திருகோணமலையில் உள்ள இந்துக்கல்லூரி உள்ளிட்ட பல பள்ளிகளை அவர் நிறுவினார். அவை அவரது அழியா அடையாளங்களாக இன்றும் திகழ்கின்றன.

அவர் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தேழாம் ஆண்டு யூலை மாதம் பத்தொன்பதாம் நாள் (19.07.1947) இயற்கை எய்தினார்.

### ஈசன் உவக்கும் இன்மலர் மூன்று

வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது

காப்பவிழ்ந்த தாமரையோ கழுநீர் மலர்த்தொடையோ
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ
காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது

பாட்டளிசேர் பொற்கொன்றையோ பாரிலில்லாக் கற்பகமோ
வாட்டமுறா தவர்க்கு வாய்த்த மலரெதுவோ
பாட்டளிசேர் கொன்றையல்ல பாரிலில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது

## பொழிப்பு:

வெள்ளை நிறமான மல்லிகைப் பூவோ? வேறெந்தச் சிறந்த மலரோ? வள்ளலாகிய இறைவனுடைய திருவடிகள் இரண்டுக்கும் ஏற்ற மலர் எதுவோ? வெள்ளைநிறப் பூவுமல்ல, வேறெந்தப் பெருமைக்குரிய மலருமல்ல, உள்ளமாகிய தாமரை மலரே அந்தணனான இறைவன் விரும்புவது.

மொட்டவிழ்ந்து விரிகிற தாமரைப் பூவோ? செங்கழுநீர் மலர்களால் தொடுக்கப்பட்ட சரமோ? தலைமகனாய் இருக்கிற இறைவனுக்கு ஏற்ற மலர் எதுவோ? அப்போதே மொட்டவிழ்ந்த மலருமல்ல, செங்கழுநீர் பூச்சரமுமல்ல, (இறைவனை நோக்கி) கும்பிடும் கையாகிய காந்தள் மலரே இறைவன் விரும்புவது.

பாடுகின்ற வண்டுகள் மொய்த்துள்ள பொற்கொன்றை மலரோ? மண்ணுலகில் இல்லாத கற்பகமரத்தின் பூவோ? என்றும் வாட்டமில்லாதவரான இறைவனுக்கு ஏற்ற மலர் எதுவோ? முரலும் வண்டுகள் மொய்க்கின்ற பொற்கொன்றை மலருமல்ல, உலகில் இல்லாத பூவுமல்ல, (இறைவனிடம்) அன்பு பொங்கும் விழியாகிய நெய்தல் மலரே இறைவன் விரும்புவது.

## அருங்குறிப்பு

விருப்பு வெறுப்பற்றவனான இறைவனுக்கு வெறும் பூவும் பூசையும் ஏற்றதல்ல; மாசிலா உள்ளத்திலிருந்து தோன்றுகிற இறையன்பானது கண்களின் வழி தெரிய, இறைவனை நோக்கிக் கைகூப்பி நெக்குருகி நிற்றலையே ஈசன் ஏற்பான்.

## கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. விபுலாநந்தரின் இளமைப்பெயர் யாது? அவர் பிறந்த இடத்தையும் காலத்தையும் தருக.
2. அவர் எந்தெந்த மொழிகளில் வல்லவராயிருந்தார்? அவர் தமது பன்மொழி அறிவை எவ்வாறு பயன்படுத்தினார்?
3. தமிழ்மொழிக்கு விபுலாநந்த அடிகள் ஆற்றிய தொண்டுகளைத் தருக.
4. யாழ்நூலின் சிறப்பை எழுதுக.
5. ஈசன் உவக்கும் இன்மலர்கள் எத்தகைய எண்ணங்களை உமது உள்ளத்தில் எழுப்புகின்றன?
6. விபுலாநந்த அடிகளினால் ஏதிலி மாணவர் பெற்ற நன்மைகள் எவை?
7. பற்பல, ஏழை என்னும் சொற்களுக்கு எதிர்ப்பொருட் சொற்களை எழுதுக.

## சொற்பொருள்:

| | | |
|---|---|---|
| ஈடிணை | - | தகுதியும் ஒப்பும் |
| திகழ்தல் | - | விளங்குதல் |
| வடமொழி | - | சமற்கிருதம் |
| தங்ககம் | - | தங்கியிருக்கும் இடம் |
| வித்தகர் | - | பேரறிஞர் |
| ஏதிலி | - | கதியற்றவர் |
| காப்பவிழ்ந்த | - | மொட்டுவிரிந்த |
| கழுநீர் மலர் | - | நீர்ப்பூ |

| | | |
|---|---|---|
| அடியிணை | - | திருவடிகள் இரண்டு |
| உத்தமன் | - | அந்தணன் |
| கோமகன் | - | தலைவன் |
| பாட்டளி | - | பாடும் வண்டு |
| நாட்டம் | - | அன்பு, காதல், விருப்பு |
| கற்பகம் | - | பார்ப்பாரத் தொன்மப் (புராணம்) புளுகுகளின்படி தேவலோகத்தில் இருப்பதாகச் சொல்லப்படும் ஒரு மரம். இம்மரம் கேட்டது எதையும் கொடுக்குமாம். |
| வாட்டமுறாதவர் | - | இறைவன் சினம், மகிழ்வு, விருப்பு,வெறுப்பு போன்ற உணர்வுகளால் வாடாதவன். |

## பழமொழி

விளையும் பயிரை முளையிலே தெரியும்.

*(பிற்கால வளர்ச்சி இளமைச் செயல்களிற் தெரியும்)*

## திருக்குறள்

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்கு மரிது

*(அதிகாரம் 65 - குறள் 647)*

*பிறரைக் கவரும்படி சொல்ல வல்லவன், சொல்வதில் சோர்வடையான். அத்தகையவனை எதிர்த்து வெல்லுதல் எவருக்கும் கடினமாகும்.*

# இலக்கணம்

## வேற்றுமை

பூங்குன்றன் - பெயர்ச்சொல்

1. பூங்குன்றன் அழைத்தான்.
2. பூங்குன்றனை அழைத்தான்.

பூங்குன்றன் அழைத்தான்: இதில் பூங்குன்றன் யாரோ ஒருவரை அழைத்தான் என்ற பொருளைத் தருகிறது.

பூங்குன்றனை அழைத்தான்: யாரோ ஒருவன் பூங்குன்றனை அழைத்தான் என்னும் பொருளைத் தருகிறது.

இவ்விரண்டு சொல்லியங்களிலும் பூங்குன்றன் என்ற பெயர்ச்சொல்லின் செயற்பாடு வேறு வேறாக அமைகிறது. முதலாவது சொல்லியத்தில் பூங்குன்றன் என்ற பெயர்ச்சொல் எழுவாயாக வருகிறது. இரண்டாவது சொல்லியத்தில் பூங்குன்றன் என்ற பெயர்ச்சொல் செயப்படுபொருளாக வருகிறது. இவ்வாறு சொல்லியத்தில் அமைந்துவரும் பெயர்ச்சொற்களின் செயற்பாடு (பொருள்) வேறுபடுவதை வேற்றுமை என்கின்றோம். பெயர்ச்சொல்லுடன் (பூங்குன்றன்) சேர்ந்து பொருளை வேறுபடுத்தும் இடைச்சொல் ‘ஐ’, வேற்றுமை உருபு என அழைக்கப்படும்.

பின்வரும் எடுத்துக்காட்டுகளில் பெயர்ச்சொற்களின் செயற்பாடு வேற்றுமைக்கு ஏற்ப வேறுபட்டு அமைந்திருப்பதைக் கவனியுங்கள்.

| சொல்லியம் | வேற்றுமை உருபு |
|---|---|
| 1. நாவரசி பாடினாள். | உருபு இல்லை |
| 2. அம்மா நாவரசியை அழைத்தாள். | ஐ |
| 3. நாவரசியால் படம் வரையப்பட்டது. | ஆல் |
| 4. அவள் நாவரசிக்கு மலர் கொடுத்தாள். | கு |
| 5. கிளிநொச்சியின் வடக்கு யாழ்ப்பாணம் ஆகும். | இன் |
| 6. இந்நூல் நாவரசியினுடையது. | அது |
| 7. மீன்கள் நீரில் வாழ்கின்றன. | இல் |
| 8. மாணவர்களே! இங்கே வாருங்கள்! | உருபு இல்லை |

## முதலாம் வேற்றுமை

'நாவரசி பாடினாள்' என்னும் சொல்லியத்திலுள்ள பெயர்ச்சொல் நாவரசி. நாவரசி என்ற பெயர்ச்சொல்லுடன் வேற்றுமை உருபு எதுவும் சேர்ந்து வரவில்லை. நாவரசி என்ற சொல் சொல்லியத்தின் எழுவாய். மாற்றம் இல்லாமல் வரும் பெயர்ச்சொல் எழுவாய் வேற்றுமை எனப்படும். இதுவே முதலாம் வேற்றுமை. இதற்கு உருபு இல்லை.

எ - கா: கபிலன் வந்தான்.
சிறுவன் விளையாடினான்.

## இரண்டாம் வேற்றுமை - வேற்றுமை உருபு 'ஐ'

'அம்மா நாவரசியை அழைத்தாள்' என்ற சொல்லியத்தில் நாவரசி என்ற பெயர்ச்சொல்லுடன் 'ஐ' உருபு சேர்ந்து நிற்கிறது. அதனால் 'நாவரசி' என்பது அச்சொல்லியத்தில் செயப்படுபொருளாகிறது. தன்னை ஏற்ற பெயரின் பொருளை, செயப்படுபொருளாக மாற்றுவதே 'ஐ' உருபின் செயலாகும்.

எ + கா: 1. குமரன் குளத்தைக் (குளம் + ஐ) கட்டினான்.
2. யானைகள் பயிரை (பயிர் + ஐ) அழித்தன.
3. முயற்சி வெற்றியைத் (வெற்றி + ஐ) தந்தது.

மூன்றாம் வேற்றுமை - உருபுகள் ஆல், ஒடு, ஓடு

எ + கா: 1. வெண் கட்டியால் (வெண்கட்டி + ஆல்) எழுதினார்.
2. முதல்வரால் (முதல்வர் + ஆல்) அறிவிக்கப்பட்டது.
3. நண்பனோடு (நண்பன் + ஓடு) சென்றான்.

நான்காம் வேற்றுமை - உருபு 'கு'

எ + கா: 1. தங்கைக்கு (தங்கை + கு) மோதிரம் கொடுத்தான்.
2. மாறனுக்கு ( மாறன் + கு ) குமரன் எதிரி.
3. தேன்மொழிக்கு ( தேன்மொழி + கு ) நண்பி தமிழினி.

பாடம் 10

# மின்மினிப் பூச்சிகள்

நான் ஆறு அகவைச் சிறுமியாக எங்கள் புது வீட்டில் குடியேறிய காலத்தில், தம்பியுடன் சேர்ந்து மின்மினிப்பூச்சிகளைப் பிடித்து விளையாடுவது வழக்கம்.

பொழுதுபட்டால் மின்மினிப்பூச்சிகள் கூட்டங்கூட்டமாக மின்ன ஆரம்பித்து விடும். நானும் தம்பியும் ஓடியோடி, கையை வீசிவீசி அவற்றைப் பிடிக்கத் தொடங்கி விடுவோம். வெற்றி எப்போதும் எனக்குத்தான்.

பாவம் என் சின்னத்தம்பி! அவன் வளர்ந்து பெரியவனான போது மின்மினிப்பூச்சிகளின் தொகை குறையத் தொடங்கிவிட்டது. இப்பொழுது அவற்றை மருந்துக்கும் காண முடியாது. அவை எங்கோ மறைந்து விட்டன.

“அவை இங்கே எப்படி வாழும்? நாங்கள் அவற்றின் வாழ்விடத்தை அழித்து விட்டோமல்லவா?” என்கிறார் அப்பா. அவற்றின் வாழ்விடத்தை அழிக்கும் தொண்டை முன்னின்று செய்தவர் அப்பாதான். இந்தக் கும்மிருட்டுக்குள்ளால் எப்படிப் போவது என்று முதலில் முணுமுணுத்தார். பின்பு நாயுருவிப் பற்றைக்குள் பாம்பு பூச்சியெல்லாம் வாழ்வதால் “பற்றைகளை அழிக்க வேண்டும்” என்று சூளுரைத்தார்.

ஒழுங்கைக்கு மின் வெளிச்சம் ஏற்றும்படி, அப்பகுதியில் வாழ்ந்த எட்டுக் குடும்பங்களும் ஆட்சிப்பிரிவுச் செயலருக்குக் கூட்டாக விண்ணப்பம் செய்தன. கைமேல் பலன் கிடைத்தது. ‘மெர்க்குரி’ மின்குமிழ்கள் இரவைப் பகலாக்கின.

வினைக்கொடை மூலம் பற்றையை அழிக்க முயற்சி செய்தனர். அந்த ஞாயிற்றுக்கிழமை எங்களுக்கெல்லாம் கொண்டாட்டம். பெரியோர் பற்றைகளைப் பிடுங்கினர்; பெரிய மரங்களை வெட்டிச் சாய்த்தனர்.

நாங்கள் அவற்றை இழுத்துக் கொண்டு போய், வெளியான இடமொன்றில் குவித்தோம். மாலையில் அதற்குத் தீ வைத்தனர்.

நாயுருவிப் பற்றைக்குள்ளிருந்து மின்மினிப்பூச்சிகள் கிளம்பிப் பறந்தன. அவற்றை நாங்கள் துரத்தித்துரத்திக் குழைக்கொப்புகளால் அடித்து விரட்டினோம். அன்று அது எங்களுக்கு நல்ல விளையாட்டாக இருந்தது.

''தெருவும் போட்டுவிட்டால் இந்தப் பகுதி சீரடைந்து விடும். எங்கள் காணிகளின் மதிப்பு உயர்ந்து விடும்'' என்று அப்பா கூறினார். மற்றவர்களும் அதை வழிமொழிந்தனர். ஆட்சிப்பிரிவுச் செயலரைக் கொண்டு 'தார்த்தெரு' அமைத்தனர். பற்றையாகக் கிடந்த வெறுங் காணிகளெல்லாம் யானை விலை குதிரை விலை போயின. அடங்கலும் வீடுகள் தோன்றின.

மின்மினிப்பூச்சிகள் இரக்கத்திற்கு உரியவை. அவை கண்காணாத ஏதோ ஓர் இடத்துக்குப் பறந்து போய்விட்டன. முதலில் அவற்றுக்குத் தேவையான இருளைப் பறித்தோம். அவற்றின் வாழ்விடமான பற்றையைப் பிடுங்கினோம். இறுதியில், குடம்பிகளின் உணவான நத்தைகளை அழித்தோம். மின்மினிப் பூச்சிகளால் என்னதான் செய்ய முடியும்? தங்களுக்கு உகந்த வாழ்விடத்தைத் தேடிப் பறந்து போய்விட்டன.

வானத்து விண்மீன்கள் எல்லாம் ஒருங்கே உதிர்ந்து, புவிமீது கொட்டுவது போன்று வித்தை காட்டிய மின்மினிப்பூச்சிகளை மட்டுமா நாங்கள் அழித்தோம்? முன்பெல்லாம் எங்கள் தோட்டத்து மண்ணைத் தோண்டினால், கொழுத்த மண்புழுக்கள் நெளியும். இன்று மெலிந்த சில மண்புழுக்களைக் கூடக் காண்பது அரிது. அம்மா அவற்றையும் கொன்று விட்டார். பூங்கன்றுகள் எல்லாம் கொத்துக் கொத்தாகப் பூக்கவேண்டும் என்ற ஆசையில், வேதியற் பசளைகளைத் தாராளமாகப் பயன்படுத்தினார். அது போதாதென்று பூச்சி கொல்லிகளையும் விசிறினார். மண்புழுக்கள் மட்டுமல்ல வண்ணத்துப் பூச்சிகளும் அருகிவிட்டன.

காடு உயிரினத்துக்கு இயற்கையளித்த ஒரு சூழல் தொகுதியாகும். இச்சூழல் தொகுதி பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக ஏற்பட்ட வளர்ச்சியின் விளைவாக உருவாகியது. அங்கு பல்வேறு உயிரினங்கள் இயக்கச் சமநிலையில் வாழ்கின்றன. எல்லா உயிரினங்களும் ஒன்றிலொன்று தங்கியுள்ளன. இயற்கை அவற்றிற்கிடையே ஒரு சமநிலையை ஏற்படுத்தியுள்ளது. எல்லா உயிரினங்களும் சேர்ந்து, ஒருங்கிணைந்த தொகுதியாகத் தொழிற்படுகின்றன. காடழிப்பு இவ்வியக்கச் சமநிலையைச் சீரழித்து விடுகிறது. அதனால், சில உயிரினங்கள் அழிந்து போகின்றன. சில உயிரினங்கள் இயற்கைக் கட்டுப்பாடுகளை மீறி, விரைவாகப் பெருகுகின்றன.

சூழற்காப்பு இயக்கம் அனைத்துலக மட்டத்தில் பலம்பெற்று வருகிறது. சூழற்காப்புப் பற்றிய உணர்வு எங்களுக்கு இருந்திருந்தால், மின்மினிப் பூச்சிகளையும் நாங்கள் எப்படியும் காப்பாற்றியிருப்போம். நாம் எல்லோருமாகச் சேர்ந்து பற்றையின் ஒரு சிறுபகுதியைப் பேணிக்காத்து மின்னொளி, தார்த்தெரு ஆகியவற்றுடன் மின்மினிப் பூச்சிகளையும் காப்பாற்றியிருக்கலாம்.

## கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. மின்மினிப்பூச்சிகள் வாழ்வதற்கு ஏற்ற சூழல் எது?
2. மின்மினிப்பூச்சிகள் தம் வாழ்விடத்தை விட்டுப் பறந்து போனமை ஏன்?
3. மண்புழுக்களும் வண்ணத்துப்பூச்சிகளும் ஏன் அருகிப் போயின?
4. இயக்கச் சமநிலையைச் சீரழிக்கும் கரணியங்கள் எவை?
5. இயற்கை உயிரினங்களுக்கு அளித்த சூழல் தொகுதி எது?
6. அச்சூழல் தொகுதி அழிக்கப்படுவதால், உண்டாகும் விளைவுகள் எவை?
7. இந்தப் பாடத்தைப் படித்து முடித்த பின்னர், உங்களுடைய உள்ளத்தில் எழுகிற உணர்ச்சியை எழுதுக.

## சொற்பொருள்:

| | |
|---|---|
| வினைக்கொடை | - கூலியின்றி வேலை செய்தல். |
| குடம்பி | - கூட்டுப்புழு |
| வேதியல் | - செயற்கை மூலகம் |
| மெர்குரி | - இதளி மின்விளக்கு |

## பழமொழி

குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்.

*(போலிப் பெருமை காட்டுதல்)*

## நீதிவெண்பா

பொன்னும் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும்
சின்னம் படவருத்தம் செய்தாலும் - முன்னிருந்த
நற்குணமே தோன்றும் நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து.

- குமரகுருபர அடிகளார்

*பொன், கரும்பு, பால், சந்தனம் என்னும் இந்நான்கினையும் உருக்குலைத்து வருந்தும்படி துன்புறுத்தினாலும் முன்னே இருந்த ஒளி, இனிமை, சுவை, மணம் என்னும் நல்ல இயல்புகளே விளங்கித் தோன்றும். அதுபோல, நல்லோரிடத்தும் அவர்கள் எவ்வளவு துன்புற்றாலும் பழைய நல்லியல்புகளே விளங்கித் தோன்றும்.*

## இலக்கணம்

### உடன்பாடு - எதிர்மறை வினைகள்

#### உடன்பாடு

எ - கா: அவன் வீட்டிற்குச் சென்றான்.
அவன் வீட்டிற்குச் செல்கிறான்.
அவன் வீட்டிற்குச் செல்வான்.

இங்குள்ள சொல்லியங்களின் வினைச்சொற்கள், செயல்கள் நிகழ்வதைக் காட்டுகின்றன.

## எதிர்மறை

எ - கா: அவன் வீட்டிற்குச் சென்றிலன்.
(அவன் வீட்டிற்குச் செல்லவில்லை)
அவன் வீட்டிற்குச் செல்கிறானிலன்.
(அவன் வீட்டிற்குச் செல்கிறானில்லை)
அவன் வீட்டிற்குச் செல்லான்.
(அவன் வீட்டிற்குச் செல்லமாட்டான்)

இங்குள்ள சொல்லியங்களின் வினைச்சொற்கள், செயல் நிகழாமையைக் காட்டுகின்றன.

செயல் நிகழ்ந்தமையைக் காட்டும் வினைச்சொற்கள் உடன்பாட்டு வினைகள் எனப்படும். செயல் நிகழாமையைக் காட்டும் வினைச் சொற்கள் எதிர்மறை வினைகள் எனப்படும். உண்மைக்கும் உடைமைக்கும் மறுதலையாக இன்மையைச் சுட்டிவருவதும் எதிர்மறையாகும்.

எ-கா:
1. அவள் வரமாட்டாள்.
   அவன் வரவில்லை.
2. அவன் நண்பன் அல்லன்.
   அவள் நண்பி அல்லள்.
   அவர்கள் நண்பர் அல்லர்.
   அது அறம் அன்று.
   அவை அறம் அல்ல.

பாடம் 11

# விருந்தோம்பல்

தமிழரது சிறந்த பண்புகளில் விருந்தோம்பலும் ஒன்று. இல்லறத்தார் செய்ய வேண்டிய இன்றியமையாக் கடமைகளுள் ஒன்றாகத் தமிழர் இதனைக் கருதுகின்றனர்.

பழந்தமிழர் விருந்தோம்பிய முறைமையைப் பழந்தமிழ்ப் பனுவல்கள் வாயிலாக அறியலாம். ‘தொண்டைமான் இளந்திரையன்’ என்பவன் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத வேந்தன்; சிறந்த வள்ளல். அவனை நாடிப் பரிசிலர் பலர் வந்து போவர்: பச்சைக் கம்பளம் விரித்தாற்போன்று பசுமை நிறைந்த வயல்களின் ஊடாகச் செல்லும் வழிகளில் போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருக்கின்றனர். அவ்வழி எங்கும் உழவர் குடியிருப்புகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. தொண்டைமான் இளந்திரையனை நாடி அவ்வழி செல்வோர் சிறிது களைப்பாற, உழவரது வளமனைகளை நாடுகின்றனர். உழவர் வந்திருக்கும் புதியோர் பருக மோர் வழங்கிக் களைப்பைப் போக்குகின்றனர். பின்னர் பெட்டைக் கோழியைப் பொரித்து அதனைச் சோற்றுடன் படைத்து, வந்த விருந்தினரின் பசியைப் போக்குகின்றனர். பெரும்பாணாற்றுப்படை என்னும் கழக இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள எளிய விருந்தோம்பும் காட்சி இதுவாகும்.

கழக இலக்கியத்தில் ஒன்றான சிறுபாணாற்றுப்படையில் இடம்பெற்றுள்ள விருந்தோம்பும் காட்சி ஒன்றை இனிக் காண்போம். நல்லியக்கோடன்



என்னும் வள்ளல் தன்னை நாடிவந்த பரிசிலர் ஒருவரை அன்போடு வரவேற்கிறான்; அவரை அன்பொழுகப் பார்க்கிறான்; அவருடைய பழைய ஆடையை மாற்றிக் கொள்ளுமாறு, தூய வெள்ளை ஆடையை வழங்குகிறான்; பின்னர் ஒளிரும் கலத்திலே அறுசுவை மிக்க உணவைப் படைத்து, 'போதும் போதும்' என்று கூறுமளவுக்கு அருகே இருந்து உண்பிக்கிறான்.

திருவள்ளுவர் விருந்தோம்பலின் சிறப்பை விளக்கி ஓர் அதிகாரத்தையே அமைத்துள்ளார். விருந்து என்றாலே புதியோரைக் குறிக்கும். பழங்காலத்தில் முன்பின் அறியாதவராயினும் தம் வீட்டுக்கு வருவோரை விருந்தினராக ஏற்று, அறுசுவை உண்டி வழங்கி, அன்போடு விருந்தோம்பினர்.

வீட்டிற்கு வரும் விருந்தினரை உள்ளன்போடு நோக்கி, முகமலர்ந்து வரவேற்க வேண்டும். முகத்தில் சிறிது மாறுபாடு காட்டினாலே விருந்தினர் உள்ளம் அனிச்சம் பூப்போல் வாடிவிடும்.

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

*(அதிகாரம் 09 - குறள் 90)*

என்று திருவள்ளுவர் கூறுகிறார். வந்த விருந்தினரோடு அன்பொழுக இன்மொழிகள் பேசி, அவர்கள் களைப்பை முதலில் போக்க வேண்டும். அவர்களுக்குப் பிடித்த உணவைச் சுவைபடச் சமைத்து அன்போடு படைக்க வேண்டும். உணவின் சுவையை விட உணவைப் படைப்பவரின் அன்பும் உணவிடும் பாங்குமே விருந்தினரை மகிழ்விக்கும்.

இட்டுப்பார் உண்டவர்கள்
இன்புற் றிருக்கையிலே
தொட்டுப்பார் உன்நெஞ்சைத்
தோன்றுமின்பம்

என்று பாவேந்தர் தம் 'குடும்பவிளக்கு' என்னும் நூலில் இதனை அழகாகக் கூறுகிறார். விருந்தினர் அன்றாடம் வரினும், அவர்களை அன்போடு விருந்தோம்பி வருபவரின் வாழ்க்கை அழிவதில்லை என்பது வள்ளுவர் கருத்து.

விருந்தோம்புதல் கணவன் மனைவி இருவருக்குமே உரிய கடமையாகும். எனினும், மனையை ஆளும் மனையாளுக்கே அதில் பெரும்பங்கு உண்டு என முன்னோர் கருதினர். சிலப்பதிகாரத் தலைவி கண்ணகி, கணவன் தன்னை விட்டுப் பிரிந்திருந்த காலத்தில் இல்லறத்தார் பேணும் கடமையாகிய விருந்தோம்பலைச் செய்ய முடியவில்லை என வருந்தினாள்.

....தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை

என்று கூறிக் கண்ணகி வருந்தியதாக இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். விருந்தோம்பும் பண்பைப் பெண்கள் பேணிக் காப்பின், அவர்கள் பெருமை அடைவதோடு அவர்தம் இல்லறமும் நல்லறமாய் இனிதே விளங்கும் என்பது சான்றோர் கருத்து.

## கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. தொண்டைமான் இளந்திரையனை நாடிச் சென்ற பரிசிலரின் பசியை உழவர் எவ்வாறு போக்கினர்?
2. விருந்தினரை எவ்வாறு வரவேற்க வேண்டுமெனத் திருக்குறள் கூறுகிறது?
3. விருந்தோம்புதலில் எப்பொழுது மகிழ்ச்சி உண்டாகும் எனப் பாவேந்தர் கூறுகிறார்?
4. சிலப்பதிகாரக் காப்பியத் தலைவி கண்ணகி, விருந்தோம்பலை மேற்கொள்ள இயலாமற் போனதற்கான கரணியம் யாது?

5. பழந்தமிழர் விருந்தோம்பிய முறையை எதன் வாயிலாக அறியலாம்?

6. விருந்தோம்பல் பற்றிக் கூறும் ஐந்து நூல்கள் எவை?

7. 'விருந்தோம்புதலில் பெண்ணுக்கே பெரும்பங்கு' என்ற கூற்றை இக்காலச் சூழ்நிலையோடு ஒப்பிட்டு உமது கருத்தைத் தருக.

## சொற்பொருள்:

பனுவல் - நூல்
தொல்லோர் - முந்தையோர்
கோடலும் - கொள்ளுதலும்

## பழமொழி

குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.

*(மனச்சான்று உறுத்தும்)*

## மூதுரை

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவுஅல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு

- ஔவையார்

*வற்றிய குளத்தை விட்டு நீங்கிச் செல்லும் நீர்ப்பறவை போல், துன்பம் வந்த காலத்தில் விட்டு நீங்குவோர் உறவினர் அல்லர். அந்த வற்றிய குளத்திலே கொட்டி, ஆம்பல், நெய்தல் ஆகிய நீர்ச் செடிகள் ஒட்டி இருப்பதுபோல, துன்பம் வந்த காலத்திலும் விட்டு நீங்காது சேர்ந்து இருப்போரே உறவினர். (வற்றிய காலத்தில் நீர்ச்செடிகள் குளத்தோடு காய்ந்து கிடந்து, பின்னர் நீர் வந்ததும் மீண்டும் செழித்து எழும்)*

# இலக்கணம்

## இடைச்சொல்

இடைச்சொற்கள் பெயர்ச்சொல்லைப் போன்றோ வினைச்சொல்லைப் போன்றோ தனித்து நின்று பொருள் தரா. இவை பெயர் அல்லது வினையுடன் சேர்ந்து நின்றே பொருள் தரும்.

எ -கா: 1. அவன் உணவை உண்டான்.
2. அமலன் பாடம் படித்தான்.

'ஐ' என்ற இடைச்சொல் உணவு என்ற பெயர்ச்சொல்லோடு சேர்ந்து இரண்டாம் வேற்றுமைப் பொருளைத் தருகிறது.

இவை பெயர் அல்லது வினையுடன் சேர்ந்து நின்றே பொருள் தரும்.

இரண்டாவது சொல்லியத்திலுள்ள 'படித்தான்' என்பதிலுள்ள 'ஆன்' என்ற விகுதி 'படி' என்ற வினையடியுடன் சேர்ந்து, உயர்திணை ஆண்பாலைக் காட்டுகிறது. 'ஆன்' என்பது விகுதியாகிய இடைச்சொல்லாகும்.

இவ்வாறு தனித்து நின்று பொருள் உணர்த்தாமல் வேற்றுமை உருபுகள், விகுதிகள் என்பன பெயர்ச் சொற்களோடும் வினைச் சொற்களோடும் சேர்ந்து பொருள் தருவதால் அவற்றை 'இடைச்சொற்கள்' என்கின்றோம்.

## பாடம் 12 நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்

ஒருமொழி செம்மொழியாகப் போற்றப்பட, அம்மொழியில் உள்ள இலக்கிய இலக்கணச் செழுமையே கரணியமாகும். அவ்வாறு தமிழுக்கு அணிகலனாக விளங்கும் இலக்கிய நூல்கள், தமிழ்மொழிக்கும் தமிழர்க்கும் பெருமையும் பெருமிதமும் வழங்குகின்றன. கழகத் தமிழ் நூல்கள், அறநெறி நூல்கள், தேவார திவ்வியப் பிரபந்தங்கள், ஐம்பெருங் காப்பியங்கள் முதலியன செந்தமிழ் மொழிக்குச் சிறப்புச் சேர்க்கின்றன. அவற்றுள் நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் சிலப்பதிகாரமே சிறந்தது எனப் போற்றப்படுகிறது.

சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியம், நாட்டுக் காப்பியம், நாடகக் காப்பியம், குடிமக்கள் காப்பியம், இறைநெறிப் பொதுமைக் காப்பியம் எனப் பலவாறாகப் போற்றப்படுகிறது.

கோவலன் கண்ணகி வாழ்வின் தொடக்கத்தில் சிலம்பு அறிமுகமாகிறது. அது அவர்கள் காவிரிப்பூம் பட்டினத்தை விட்டு மதுரைக்குப் புறப்படும் பொழுது சொல்லப்படுகிறது. மதுரையின் பல்வேறு இடங்களில் சிலம்பு பற்றிப் பரவலாகப் பேசப்படுகிறது. அதுவே, கோவலன் கொலைக்கும் ஏதுவாகிறது. அந்தச் சிலம்பேதான் வழக்காடும் பொருளாகவும் அறத்தை நிலைநாட்டும் சான்றுப் பொருளாகவும் விளங்குகிறது. இவ்வாறு இக்காப்பியத்தின் உருவாக்கத்திற்கே சிலம்பு கருவாக இயங்குவதால், ‘சிலப்பதிகாரம்’ (சிலம்பு + அதிகாரம்) எனப் பெயர் பெறுகிறது.

சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம்ஓர் பாட்டுடைச் செய்யுள்

இவ்வாறு இளங்கோவடிகள் தமது பதிகப் பாடலில் குறிப்பிடுகிறார். உரைநடையையும் உள்ளத்தை உவகை கொள்ளச் செய்யும்

பாடலையும் கதைமாந்தர் நேரடியாக உரையாடும் அமைப்பையும் கொண்டு சிலப்பதிகாரம் பாடப் பெற்றிருக்கிறது. இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழும் இடம்பெற்றிருத்தலால் சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியம் எனப்படுகிறது.

இக்காப்பியக் கதை சோழநாட்டின் காவிரிப்பூம் பட்டினத்தில் தொடங்கி, பாண்டிய நாடான மதுரையில் தொடர்ந்து, சேர நாடான வஞ்சிமா நகரில் முடிவு பெறுகிறது. இவ்வாறு சேர சோழ பாண்டிய நாடுகளில் காப்பியக் கதைமாந்தர் நடமாடுதல், மூன்று நாடுகளின் இயற்கை வளங்கள், மக்களது வாழ்க்கை முறைகள், கலை



பண்பாட்டுப் பின்னணிகள், மன்னர்களின் ஆட்சித்திறம் முதலியன எடுத்துக் கூறப்படுகின்றன. இதனால் சிலப்பதிகாரம் தமிழ்நாட்டுக் காப்பியம் என்னும் சிறப்போடு விளங்குகிறது. இளங்கோவடிகளிடம் காப்பியக் கதையை எடுத்துக்கூறிய 'மதுரைக் கூலவாணிகன் சாத்தனார்' என்னும் புலவர்,

முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது
அடிகள் நீரே அருளுக!

என்று கூறியதாகச் சிலப்பதிகாரப் பதிகத்தில் குறிக்கப் பெற்றுள்ளது.

இளங்கோவடிகளால் இந்தக் காப்பியம் எழுதப்பட்ட காலத்தில் பாவலர் பெருமக்கள் கடவுளர், அரசர், சான்றோர் முதலியோரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடுவர். சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகள் முற்றிலும் மாறாக குடிமக்களாகிய கோவலன், கண்ணகி, மாதவி ஆகியோரைத் தமக்கு நிகரில்லாத தகைமை உடையோராகக் கொண்டு காப்பியத்தை முன்னெடுக்கிறார். மணிமேகலை, ஆய்ச்சியர், அந்தணர், ஊர்மக்கள் ஆகியோரைக் கதை மாந்தராகவும் முடியுடை மூவேந்தரை இடையிடையே வரும் துணைமாந்தராகவும் கொண்டு காப்பியத்தை நிறைவு செய்திருக்கிறார். ஆகவே, சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம் என்னும் சிறப்பைப் பெற்றுள்ளது.

இந்தக் காப்பியத்தின் ஒவ்வொரு காதையும் ஒவ்வொரு நாடகக்காட்சி போன்று விளங்குகிறது. கதைமாந்தர் ஒவ்வொருவரும் நேரிடையாகப் பேசிக் கொள்வதுபோல் உரையாடல்கள் அமைந்துள்ளன. இதனால் சிலப்பதிகாரம் சிறந்ததொரு நாடகக் காப்பியம் என்றும் போற்றப்படுகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக இக்காப்பிய ஆசிரியரான இளங்கோவடிகள் சமணநெறிச் சார்புடையவர். எனினும், காப்பியத்தில் எந்தப் பகுதியிலும் சமணநெறி தொடர்பான கருத்துகளை வலியுறுத்திச் சொல்லவில்லை. அதுமட்டுமன்றி, அந்தக் காலகட்டத்தில் மக்களின் வாழ்க்கையோடு

ஒன்றியிருந்த சைவ, வைணவ நெறிகள் பற்றியும் கோவில்கள் பற்றியும் பொதுப்படையாகக் கூறுகிறார். ஆதலால், சிலப்பதிகாரக் காப்பியம் 'இறைநெறிப் பொதுமைக் காப்பியம்' என்னும் சிறப்பினையும் பெற்றுத் திகழ்கிறது.

எல்லாவற்றுக்கும் மேலாகச் சேரசோழபாண்டிய நாடு என்ற எல்லைகளைக் கடந்து, தமிழகம் என்ற ஒருமைப்பாட்டைச் சிலப்பதிகாரம் முன்வைக்கிறது. இவ்வாறு, பல்வேறு சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டு சிலப்பதிகாரம் திகழ்கிறது. இதனாலேயே 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' என்று சிலப்பதிகாரக் காப்பியம் போற்றிப் புகழப்படுகிறது.

## கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. சிலப்பதிகாரத்தின் முதன்மைக் கதைமாந்தர் மூவரினதும் பெயர்களைத் தருக.
2. குடிமக்கள் தலைமைக் கதைமாந்தராக அமைந்துள்ளதால் சிலப்பதிகாரம் பெறும் சிறப்புப் பெயர் என்ன?
3. இக்காப்பியக் கதையை இளங்கோவடிகளுக்கு உரைத்தவர் யார்?
4. சிலப்பதிகாரத்தைக் குறிக்கும் வேறு சிறப்புப் பெயர்கள் எவை?
5. சிலப்பதிகாரக் காதை எந்நாட்டில் தொடங்கி எந்நாட்டில் முடிகிறது?
6. சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியம் எனப்படுவது ஏன்?
7. சிலப்பதிகாரக் காப்பியத்தில் சிலம்பு வகிக்கும் இடம் என்ன?

## சொற்பொருள்:

| | |
|---|---|
| பெருமிதம் | - இறுமாப்பு |
| பிரபந்தங்கள் | - சிற்றிலக்கியங்கள் |
| முடிகெழு | - முடிசிறந்த - சிறந்த ஆட்சி |
| பதிகம் | - முன்னுரை |

## பழமொழி

சுண்டங்காய் காற்பணம் சுமைகூலி முக்காற் பணம்.

*(குறைந்த பலன் கூடிய செலவு)*

## திருக்குறள்

மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்

*(அதிகாரம் 7 - குறள் 70)*

*மகன் தன் தந்தைக்குச் செய்ய வேண்டிய நன்றி எதுவென்றால், 'இவனுடைய தந்தை இந்தப் பிள்ளையை மகனாகப் பெற என்ன தவம் செய்தானோ' என்ற புகழ்ச்சொல்லைப் பெற்றுக் கொடுத்தல் ஆகும்.*

# இலக்கணம்

## சுட்டெழுத்துகள்

அவன் கண்டிக்குச் சென்றான்.

இவ்வீடு அழகானது.

உவ்விடம் வர விரும்புகிறேன்.

இச்சொல்லியங்களில் இடம் பெற்றுள்ள அவன், இவ்வீடு, உவ்விடம் என்னும் சொற்களில் உள்ள முதலெழுத்துகள் முறையே ஒருவனையும் வீட்டையும் இடத்தையும் குறிப்பாகச் சுட்டிக்காட்டுகின்றன. இங்கு சுட்டிக்காட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள அச்சொற்களில் வரும் முதல் எழுத்துகளான அ, இ, உ என்பன சுட்டெழுத்துகள் என அழைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| அவன் | இவன் | உவன் |
| அது | இது | உது |
| அவை | இவை | உவை |
| அங்கு | இங்கு | உங்கு |
| அவ்விடம் | இவ்விடம் | உவ்விடம் |

மேலே கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகளில் அ, இ, உ என்னும் எழுத்துகள் சுட்டுப் பொருளை உணர்த்துகின்றன.

## வினா எழுத்துகள்

உன் பெயர் என்ன?

உங்கள் நலம் எப்படி?

புலவர் வாழ்த்தியது ஏன்?

இச் சொல்லியங்கள் எதையோ வினவும் வகையில் அமைந்திருப்பதைக் காணலாம். என்ன? எப்படி? ஏன்? என்னும் சொற்களில் உள்ள எ, ஏ என்னும் எழுத்துகள் வினா எழுத்துகளாகும். தமிழிலே எ, ஏ, ஓ, ஆ, யா என்ற ஐந்து எழுத்துகளும் வினாவெழுத்துகளாகும்.

இவற்றில் ‘எ’, ‘யா’ என்னும் எழுத்துகள் சொல்லின் முதலிலும் ‘ஆ’, ‘ஓ’ என்னும் எழுத்துகள் சொல்லின் இறுதியிலும் ‘ஏ’ என்னும் எழுத்து சொல்லின் முதலிலும் இறுதியிலும் நின்று வினாப்பொருளைத் தரும்போது, அவை வினாவெழுத்துகளாகும்.

| | |
|---|---|
| எது, என்ன, எப்படி, எங்கு, எதற்காக, எவ்வாறு, எவ்விதம், எங்ஙனம், எவன், எப்பையன் | ‘எ’ சொல்லின் முதலில் நின்று வினாப் பொருளைத் தருதல். |
| யார், யாது, யாவர், யாவை | ‘யா’ சொல்லின் முதலில் நின்று வினாப் பொருளைத் தருதல். |
| அவனா, அவளா, அதுவா, நீயா, வந்தானா, படித்தானா | ‘ஆ’ சொல்லின் இறுதியில் நின்று வினாப் பொருளைத் தருதல். |
| அவனோ, அவளோ, அதுவோ, நீயோ, வந்தானோ, படித்தானோ | ‘ஓ’ சொல்லின் இறுதியில் நின்று வினாப் பொருளைத் தருதல். |
| இங்கு வந்தது இவனே? அக்கதை சொன்னது நீயே? | ‘ஏ’ சொல்லின் இறுதியில் நின்று வினாப் பொருளைத் தருதல். |
| ஏன்? ஏது? | ‘ஏ’ சொல்லின் முதலில் நின்று வினாப் பொருளைத் தருதல். |

பாடம் 13

# பல்சுவைப் பாடல்கள்

## போற்றல்

காராளர் அணிவயலில் உழுது தங்கள்
கையார நட்டமுடி திருந்தில் இந்தப்
பாராளுந் திறல்அரசர் கவித்த வெற்றிப்
பசும்பொன்மணி முடிதிருந்தும் கலப்பை பூண்ட
ஏரால்எண் திசை வளர்க்கும் புகழ்வே ளாளர்
ஏரடிக்கும் சிறுகோலால் தரணி யாளச்
சீராடும் முடியரசர் இருந்து செங்கோல்
செலுத்துவர்; வேளாளர் புகழ் செப்பலாமோ!

- சேக்கிழார்

காராளராகிய உழவர் பண்படுத்தப்பட்ட வயலை உழுது, தங்களுடைய கை நிறையக் கொண்டு நட்ட நாற்றுகள் செழித்து வளர்ந்தால் இவ்வுலகை ஆளும் ஆற்றல் பொருந்திய மன்னர் சூடியுள்ள வெற்றிக்குரிய ஒன்பான் மணிகள் பதித்த முடி சிறக்கும் (அரசர் சிறப்படைவர்). கலப்பையிலே பொருத்தியுள்ள ஏரினால் எட்டுத் திசைகளில் வாழும் மக்களுக்கு உணவளித்து வளர்க்கின்ற புகழுக்குரிய வேளாளர் உழுகையின் போது, மாட்டைத் தட்டும் சிறுகோலால் இவ்வுலகை ஆள, சிறப்புப் பொருந்திய முடிசூடியுள்ள அரசர் செங்கோல் ஆட்சி நடத்துவர். எனவே, வேளாளர் புகழ் எத்துணை என்று சொல்ல முடியுமா?

## கனிவு



ஆராரோ ஆரிவரோ
ஆராரோ ஆரிவரோ
ஆரடித்து நீ அழுறாய்
அடிச்சாரைச் சொல்லியழு.

கண்ணே ஒன்னை யாரடிச்சார்
கண்மணியைத் தொட்டதுயார்
பொன்னே ஒன்னை யாரடிச்சார்
பொன்மணியைத் தொட்டதுயார்

அத்தை அடிச்சாளோ
அல்லி மலர்ச் செண்டாலே
மாமன் அடிச்சானோ
மல்லிகைப் பூச்செண்டாலே

பாட்டி அடிச்சாளோ
பாலூட்டுங் கையாலே
அண்ணன் அடிச்சானோ
அணைத்தெடுக்கும் கையாலே

ஆராரோ ஆரிவரோ
ஆராரோ ஆரிவரோ
ஆரடித்து நீ அழுறாய்
அடிச்சாரைச் சொல்லியழு.

- தாலாட்டுப்பாடல்

## இரங்கல்

குன்றுங் குழியுங் குறுகி வழிநடந்து
சென்று திரிவதென்றுந் தீராதோ - ஒன்றுங்
கொடாதானைக் 'கோ' என்றும் 'கா' என்றும் கூறின்
இடாதோ நமக்கிவ் விடர்.

*- இரட்டையர்*

மேடு பள்ளங்கள் நிறைந்த வழிகளிலே தட்டுத்தடுமாறி நடந்து அலைந்து திரிவது ஒருநாளும் தீராதா? ஒன்றும் ஈயாத கஞ்சனை மன்னனே (கோ) என்றும் சோலையே (கா) என்றும் பொய்யாகப் புகழ்ந்து பாடினால் வராதோ இந்தத் துன்பம்.

(சோலை - நிழல் முதல் கனி வரை பல பயன் தருவது)

குறிப்பு : இரட்டையர் என்போர் முடவரும் குருடருமாகிய இரு புலவோர்.

## கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. இரட்டையருக்கு குன்று குழியெல்லாம் நடக்கும்படி ஏற்பட்டது ஏன்?
2. 'போற்றல்' பாடலில் புகழ்ந்து கூறப்படும் தொழில் எது?
3. முடியரசர் செங்கோல் செலுத்த உலகை அரசாள்பவர் யார்?
4. தாலாட்டுப் பாடல் யாருக்கு, எப்பொழுது பாடப்படுகிறது?
5. 'கனிவு' பாடலில் குறிப்பிடப்படும் உறவு முறைகள் எவை?
6. இப்பாடத்திலுள்ள மூன்று பண்புகளில் நீர் விரும்பும் பண்பு பற்றி எழுதுக.
7. 'வேளாளர் புகழ் செப்பலாமோ' என்பதிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது என்ன?

## சொற்பொருள்:

| | | |
|---|---|---|
| காராளர் | - | கார்முகிலை ஆள்பவர், உழவர் |
| ஒன்பான் மணிகள் | - | நவரத்தினம் |
| அணிவயல் | - | பண்படுத்திய வயல் |
| திறல் | - | ஆற்றல் |
| திருந்தில் | - | திருத்தமாய் வளரின் (செழித்து) |
| முடிதிருந்தும் | - | முடிசிறக்கும் |
| வேளாளர் | - | மண்ணை ஆள்பவர், உழவர் |

## பழமொழி

மனமுண்டானால் இடமுண்டு.

*(விரும்பினால் இல்லாதவனும் ஈயலாம் )*

## நீதிநெறி விளக்கம்

இனியவர் என்சொலினும் இன்சொல்லே; இன்னார்
கனியும் மொழியும் கடுவே - அனல்கொளுத்தும்
வெங்காரம் வெய்தெனினும் நோய்தீர்க்கும் மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்தும் கொலும்

- குமரகுருபர அடிகள்

*நல்லோர் எதைச்சொன்னாலும் (சினத்திலும்) இனிய சொல்லாகவே இருக்கும். தீயவர் (இன்னார்) அன்புடன் சொல்கிற சொல்லும் கடுமையாகவே இருக்கும். தீயாய் எரிகிற வெங்காரம் (புண்ணுக்கு இடும் மருந்து) எரிந்தாலும் நோயைத் தீர்க்கும். உடல் சிலிர்க்க குளிர்ந்தாலும் நஞ்சு கொல்லும்.*

# இலக்கணம்

## சொற்புணர்ச்சி

இரு சொற்கள் ஒன்றுடன் ஒன்று சேர்வது புணர்ச்சி எனப்படும். இரு சொற்கள் புணரும்போது முன் நிற்கும் சொல் நிலைமொழி என்றும் வந்துசேரும் சொல் வருமொழி என்றும் சொல்லப்படும்.

எனவே, நிலைமொழி இறுதியும் வருமொழி முதலும் பொருள் பொருத்தமுறச் சேர்வது சொற்புணர்ச்சி எனப்படும். சொற்புணர்ச்சி இரு வகைப்படும். அவை இயல்புப்புணர்ச்சி, மாறுபடுபுணர்ச்சி.

### இயல்புப்புணர்ச்சி

நிலைமொழியும் வருமொழியும் எவ்வித மாற்றமுமின்றி இயல்பாகப் புணர்வது இயல்புப்புணர்ச்சி எனப்படும்.

எ - கா: நெல் + வயல் = நெல்வயல்
இசை + விழா = இசைவிழா

நிலைமொழி ஈறு மெய்யெழுத்தாக இருக்க, வருமொழி முதல் உயிரெழுத்தானால் இதுவும் இயல்பே.

எ - கா: தமிழ் + இனிமை = தமிழினிமை
மணல் + ஆறு = மணலாறு

### மாறுபடுபுணர்ச்சி (விகாரப்புணர்ச்சி)

நிலைமொழியும் வருமொழியும் இயல்பாகப் புணராமல் சில இடங்களில் எழுத்துகள் மாற்றம் பெறுகின்றன. அவ்வாறான மாற்றங்கள் மாறுபடுபுணர்ச்சி எனப்படும். மாறுபடு புணர்ச்சி மூவகைப்படும்.

அவை:

தோன்றற்புணர்ச்சி

திரிதற்புணர்ச்சி

கெடுதற்புணர்ச்சி

### தோன்றற்புணர்ச்சி

| | | | |
|---|---|---|---|
| போர் | + படை | போர் + ப் + படை | = போர்ப்படை |
| பாய் | + கப்பல் | பாய் + க் + கப்பல் | = பாய்க்கப்பல் |
| கை | + மாறு | கை + ம் + மாறு | = கைம்மாறு |
| செய் | + நன்றி | செய் + ந் + நன்றி | = செய்ந்நன்றி |

தரப்பட்ட எடுத்துக்காட்டுகளில் இரண்டு சொற்களுக்கும் இடையில் முறையே ப், க், ம், ந் என்ற மெய்யெழுத்துகள் தோன்றியுள்ளன. அவை தோன்றற்புணர்ச்சி எனப்படும்.

### திரிதற்புணர்ச்சி

நெல் + பயிர் = நெற்பயிர்

மண் + பாண்டம் = மட்பாண்டம்

ஆள் + பலம் = ஆட்பலம்

இவ்வெடுத்துக்காட்டுகளில் நிலைமொழி இறுதி எழுத்தும் வருமொழி முதல் எழுத்தும் சேரும்போது, நிலைமொழி ஈற்றெழுத்து வேறொரு எழுத்தாக மாறியுள்ளது.

நெல் + பயிர் என்பதில் இங்கு நிலைமொழி ஈற்றெழுத்து 'ல்', வருமொழி முதல் எழுத்து 'ப்' என்னும் வல்லெழுத்துடன் புணரும்போது 'ல்' 'ற்' ஆக மாற்றம் பெற்றுள்ளது. (ல் → ற்)

அதுபோல மண் + பாண்டம், ஆள் + பலம் என்பனவற்றில் வரும் நிலைமொழி ஈற்றெழுத்துகள் 'ண்', 'ள்' என்பன 'ட்'

ஆகத் திரிபடைகின்றன. இதுவே திரிதற்புணர்ச்சி எனப்படும்.

### கெடுதற்புணர்ச்சி

மரம் + வேர் = மரவேர்

பணம் + வரவு = பணவரவு

களம் + நிலை = களநிலை

இவ்வெடுத்துக்காட்டுகளில் நிலைமொழி இறுதி எழுத்துக் கெட்டு இரண்டு சொற்களும் சேர்ந்து நிற்கின்றன. அவ்வாறு

**சொற்புணர்ச்சி**

- இயல்புப்புணர்ச்சி
- மாறுபடுபுணர்ச்சி
    - தோன்றல்
    - திரிதல்
    - கெடுதல்

பாடம் 14

# இலங்கைத்தீவிலே தமிழர் ஆட்சியும் மாட்சியும்

## (கி.மு. 3 - கி.பி. 7ம் நூற்றாண்டு வரை)

பௌத்தநெறியை மேன்மைப்படுத்தவும் அதனைப் பின்பற்றும் சிங்கள இனத்தைப் பெருமைப்படுத்தவும் எழுதப்பட்ட நூலே மகாவம்சமாகும். பௌத்தநெறி சாராத அரசுகள், இனங்கள் பற்றிய செய்திகள் இந்நூலில் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளன. எனினும், மகாவம்சத்தை அடிப்படையாகக் கொண்டே தமிழர் தம் தொன்மையை எடுத்துக்காட்டி விடமுடியும். எடுத்துக்காட்டாக விசயன் காலத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கல்யாணி, நாகதீபம் ஆகிய பகுதிகளில் தமிழர் மரபினரான இயக்கர், நாகர்களின் ஆட்சி நிலவியதைப் பற்றி மகாவம்சம் எடுத்துக்கூறுகிறது.

## (கி.மு. முதலாம் நூற்றாண்டு வரை)

கி.மு. இருநூற்று முப்பத்தேழில் (237) சேனன், குத்திகன் ஆகிய தமிழ் மன்னர்கள் சூரத்தீசன் என்னும் சிங்கள மன்னனை வென்று, ஆட்சியைக் கைப்பற்றினர். இவர்கள் அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு இருபத்திரண்டு ஆண்டுகள் சிறப்பாக ஆட்சி செய்தனர்; பௌத்தநெறியைப் பேணிக்காத்து நல்லாட்சி புரிந்தனர். சூரத்தீசனின் தம்பியாகிய அசேலன் இத்தமிழ் மன்னரை வென்று, ஆட்சியைக் கைப்பற்றிப் பத்து ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான்.

கி.மு. இருநூற்றைந்தில் (205) அசேலனை வெற்றி கொண்ட எல்லாளன், நாற்பத்து நான்கு ஆண்டுகள் நீதிவழுவாது ஆட்சி புரிந்தான். எல்லாளன் காலத்தில் அநுராதபுரத்துக்குத் தெற்கே முப்பத்திரண்டு தமிழ்ச் சிற்றரசுகள் நிலவின என்று மகாவம்சம் குறிப்பிடுகிறது. உருகுணை அரசனாக இருந்த துட்டகெமுனு சூழ்ச்சிப் போரில் எல்லாளனை வெற்றி கொண்டான்.

கி. மு. இருநூற்று முப்பத்தேழில் (237) இருந்து கி.மு. நாற்பத்துநான்காம் ஆண்டுவரை, நூற்றுத் தொண்ணூற்று மூன்று (193) ஆண்டுகளில் எண்பத்தெட்டு ஆண்டுகளுக்கு மேல் தமிழ் மன்னர் அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தனர். மீதிக் காலங்களில் ஆட்சி செய்த சிங்கள மன்னர் தமிழ்ப்படைகளின் உதவியுடனேயே ஆளமுடிந்தது. மகாவம்சக் குறிப்புகளின்படி இலங்கையில் அநுராதபுரம் தவிர வேறு பல பகுதிகளிலும் வெவ்வேறு காலங்களில் தமிழர் ஆட்சிபுரிந்த வரலாற்றினை அறிய முடிகிறது.

அநுராதபுர அரசு தோற்றம் பெறுவதற்கு முன்னரே நாகதீபம், மாதோட்டம், பொன்பரிப்புப் போன்ற தமிழ்ப் பகுதிகளில் ஆதி இரும்புக்கால அரசுகள் இருந்ததாக அசோகக் கல்வெட்டுகள், கிரேக்க, உரோம நூல்கள் குறிப்பிடுகின்றன. மகாவம்சத்திலும் புத்தர் வருகையின்போது இயக்கர் நாகர்களின் ஆட்சி இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

## (கி.பி. 1 - 7ம் நூற்றாண்டு வரை)

கி.பி. முதலாம் நூற்றாண்டிலிருந்து ஐந்தாம் நூற்றாண்டுக்குள் அநுராதபுரத்தில் ஐந்து தமிழ் மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். சிங்கள மன்னர், தமிழ் மன்னரதும் தமிழ் மக்களினதும் துணையோடுதான் ஆட்சி செய்ய முடிந்தது. கி.பி. ஐந்நூறு வரையில் மாதோட்டப் பகுதி, தனியான தமிழ் மன்னராட்சியின் கீழ் இருந்தது என்று எச். டபிள்யூ. கொட்றின்றன் '**இலங்கையின் சுருக்க வரலாறு**' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பௌத்த மன்னனான கயபாகு மன்னன் இருபத்திரண்டு ஆண்டுகள் நல்லாட்சி புரிந்தான். சோழமன்னனான கரிகாற்சோழனால் தமிழகத்தில் கல்லணை கட்டுவதற்காகச் சிறைப்பிடித்துச் செல்லப்பட்ட பன்னீராயிரம் சிங்களவரை மீட்டு வரும் போது, பன்னீராயிரம் தமிழரை கயபாகு அழைத்து வந்து இலங்கையில் குடியமர்த்தியதாக 'பூசாவலி' என்னும் நூல் குறிப்பிடுகிறது. எனவே, கி.பி. 113 - 135 ஆண்டுகளுக்கிடையிலே

பன்னீராயிரம் தமிழர்கள் தமிழகத்திலிருந்து வந்து குடியேறினர் என்பது உறுதியாகிறது. கயபாகு மன்னன் பௌத்தனாக இருந்த போதிலும் சைவநெறிப் பற்றுள்ளவனாக இருந்தான். கயபாகு மன்னனே இலங்கையில் கண்ணகி வழிபாட்டைத் தொடக்கி வைத்தவன் என்பது குறிப்பிடத்தக்கது.

கி.பி. இருநூற்றுமுப்பத்தேழில் (237) சிங்கள மன்னன் அபயநாகன் என்பவன், தமிழர்களை அணிதிரட்டி அவர்களின் உதவியுடன் அநுராதபுரத்தைக் கைப்பற்றி எட்டு ஆண்டுகள் ஆட்சி செய்தான். அடுத்த இரு நூற்றாண்டுகளும் தமிழக ஆட்சியில் இருள் சூழ்ந்த காலம். இலங்கையிலும் தமிழ்மன்னர்களின் அரசியற் செல்வாக்கு குறைந்திருந்தது. கி.பி. நானூற்றுமுப்பத்தாறில் (436) பாண்டுபாரிந்தன், குட்டபாரிந்தன், கிரிதரன், தாடிகன், பீடிகன் எனும் தமிழ் மன்னர்கள் பெரும் படையெடுத்து வந்து அநுராதபுரத்தைக் கைப்பற்றினர். ஒருவர் பின் ஒருவராக இவர்கள் இருபத்தேழு ஆண்டுகள் சிறப்புற ஆட்சி நடத்தினர். கல்வெட்டுச் சான்றுகளில் இருந்து பாரிந்தன், தாடிகன் ஆகிய இருவரது ஆட்சி உருகுணை வரை பரந்திருந்தது பற்றியும் அவர்கள் பௌத்தநெறி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினர் என்பது பற்றியும் அறியமுடிகிறது.

கி.பி. நானூற்று அறுபத்து மூன்றில் (463) ஆட்சி ஏற்ற தாதுசேனனுக்கு மொகல்லானன், காசியப்பன் என இரு மக்கள். தன் தந்தை முதல் மனைவியின் மகனான மொகல்லானனுக்கு ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்துவிடுவானெனஅஞ்சிய இளையமனைவியின் மகனான காசியப்பன் தன் தந்தையைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினான். பின்பு, தமையன் மொகல்லானன் தமிழர்படையின் உதவியுடன் தம்பி காசியப்பனைக் கொன்று, ஆட்சியைக் கைப்பற்றினான்.

கி.பி. அறுநூற்று இருபத்து மூன்று தொடக்கம் அறுநூற்றுத் தொண்ணூற்றொன்று வரை (623-691), தமிழ்ப்படைகளின் உதவியைப் பெறுவோர் மட்டுமே இலங்கைத் தீவின் ஆட்சியைக் கைப்பற்ற

முடியும் என்ற நிலை நிலவியது. இக்காலகட்டத்தில் இலங்கை அரசியலில் தமிழர் செல்வாக்கு, மேலோங்கி இருந்ததைக் காணக்கூடியதாக இருக்கிறது. வளர்ந்து வரும் தமிழர் அதிகாரத்தைக் குறைப்பதற்கு சிங்கள மன்னர்கள் பல வகையில் முனைந்துள்ளனர்.

எனவே, கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரையுள்ள இலங்கை வரலாற்றை ஆராயுமிடத்து, தமிழர்களின் தொன்மை பற்றியும் தமிழ் மன்னர்களின் ஆட்சிச் சிறப்பு பற்றியும் அறிய முடிகிறது. அத்துடன் தமிழர் படைகளின் உதவியுடனேயே சிங்கள மன்னர்கள் தமது ஆட்சியை அமைத்துக் கொண்டமை பற்றியும் தெட்டத் தெளிவாக அறிய முடிகிறது.

## அருங்குறிப்புகள்:

- பண்டைய இலங்கையில் கல்யாணி, நாகதீபம் ஆகிய பகுதிகளில் பழந்தமிழ் மரபினரான இயக்கர், நாகரின் ஆட்சி நிலவியது.
- எல்லாளன் ஆட்சிக் காலத்தில் அநுராதபுரத்துக்குத் தெற்கே தமிழரசுகள் இருந்துள்ளன.
- கி. மு. 237 - 44 காலவரையறைக்குள் 193 ஆண்டுகளில் 88 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மன்னர்கள் அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்துள்ளனர்.
- அநுராதபுர அரசு தோற்றம் பெறுவதற்கு முன்பே தமிழ்ப் பகுதிகளில் ஆதி இரும்புக்காலக் குறுநில அரசுகள் இருந்தன.
- எச். டபிள்யூ. கொட்றின்றன் என்பவர் கி. பி. 500 வரை மாதோட்டப் பகுதியில் தனியான தமிழ் மன்னர் ஆட்சி நிலவியதாகக் குறிப்பிடுகிறார்.
- தமிழர் படைகளின் உதவியுடனேயே சிங்கள மன்னர்களின் ஆட்சி நடைபெற்றுள்ளது என்பது தெரியவருகிறது.

## கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. சேனன், குத்திகன் ஆகிய தமிழ்மன்னர்கள் எத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்தனர்?
2. பௌத்தநெறியை மேன்மைப்படுத்தி பிறரைத் தாழ்த்தவும் சிங்கள இனத்தைப் பெருமைப்படுத்தவும் எழுதப்பட்ட நூல் எது?
3. விசயன் காலத்துக்கு முன் இலங்கையில் வாழ்ந்த தமிழ் மரபினர் யாவர்?
4. சிங்கள மன்னர்கள் தமது ஆட்சியை அமைத்துக் கொள்ள உதவியோர் யாவர்?
5. இலங்கையில் கண்ணகி வழிபாட்டை அறிமுகப்படுத்திய மன்னன் யார்?
6. கி.மு. 3ம் நூற்றாண்டில் சிங்களவரும் போற்றும்படி அறந்தவறாது நாற்பத்து நான்கு ஆண்டுகள் ஆட்சி செய்த மன்னன் யார்?
7. மகாவம்சக் குறிப்புகளின்படி இலங்கையில் தமிழர் செல்வாக்குப் பற்றி நீர் கருதுவதை எழுதுக.

### பழமொழி

வெள்ளம் வருமுன் அணை கட்ட வேண்டும்.

*(முன்னேற்பாடு)*

## திருக்குறள்

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று

(அதிகாரம் 11 - குறள் 108)

*ஒருவர் செய்த நன்றியை (நன்மை) மறப்பது நன்றன்று. பிறர் செய்த நன்று அல்லாத (தீமை) செயலை அப்பொழுதே மறந்து விடுவது நன்று.*

## மொழி வளம்

### உவமை அணி

நாம் ஒரு பொருளைப் பார்க்கும்போது அதோடு தொடர்புடைய மற்றொரு பொருள் நினவுக்கு வருகிறது. அப்படி நினைவுக்கு வந்த பொருளையும் நேரில் கண்ட பொருளையும் இணைத்து ஒப்பிட்டுப் பேசுகின்றோம். அவ்வாறு ஒப்பிடுவது உவமையாகும்.

எ - கா:

1. பச்சைக்கம்பளம் விரித்தது போன்று வயல்கள் காட்சியளித்தன.
2. முத்துப்போன்ற சம்பா அரிசிச்சோறு

உவமை அணியில் மூன்று உறுப்புகள் இடம்பெறும். அவை உவமானம், உவமேயம், பொதுத்தன்மை என்பனவாகும். எடுத்துக்கொண்ட பொருள் உவமேயம். எடுத்துக்காட்டாகக் கூறப்படும்பொருள் உவமானம். இரண்டிற்கும் இடையே உள்ள ஒற்றுமை பொதுத்தன்மை. ஓர் உவமை அணியில் உவமானம் முன்னேயும் உவமேயம் பின்னேயும் வரும்.

உவமேயம் - வயல்
உவமானம் - பச்சைக்கம்பளம்
பொதுத்தன்மை - பசுமை

# தமிழ் நெடுங்கணக்கு

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |


ஈழம் (இலங்கை)
காங்கேசன்துறை
யாழ்ப்பாணம்
பூநகரி
ஆனையிறவு
கிளிநொச்சி
முல்லைத்தீவு
தலைமன்னார்
பனங்காமம்
கொக்கிளாய்
மன்னார்
அரிப்பு
வவுனியா
திருகோணமலை
தம்பலகாமம்
கொட்டியாரம்
கந்தளாய்
அநுராதபுரம்
கற்பிட்டி
வாகரை
சிலாபம்
கற்குடா
பொலநறுவை
மட்டக்களப்பு
மாத்தளை
புத்தளம்
கல்முனை
கண்டி
அம்பாறை
நீர்கொழும்பு
பதுளை
கொழும்பு
திருக்கோயில்
பொத்துவில்
மொறட்டுவா
இரத்தினபுரி
பெந்தோட்ட
அம்பாந்தோட்டை
மாத்தறை


யாழ்ப்பாண இராச்சியம்
கண்டி இராச்சியம்
கோட்டை இராச்சியம்

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

வளர் தமிழ் 12
பாடநூல்

வளர் தமிழ் 11
பாடநூல்

வளர் தமிழ் 10
பாடநூல்

வளர் தமிழ் 9
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 8
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 7
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 6
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 5
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 4
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 3
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 2
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 1
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் பாலர் நிலை
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் மழலையர் நிலை
பாடநூல் | எழுதுதல்